தரம் 5 – 11 வரை

# AHARAM
# அகரம்

எண்: 05 எழுத்து: 01 ஜனவரி, 2011

## பெஞ்சமின் ப்ராங்க்ளின்
## வெற்றிக் குணங்கள் 12



## 5 வருட நிறைவில்...



மாதாந்த சிறுவர் சஞ்சிகை


30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அகரம்

எண்: 05 ஜனவரி: 2011 எழுத்து: 01

**பிரதம ஆசிரியர்**
ஏ.ரி.எம். நௌபல்

**ஆலோசனைக் குழு**
அஷ்ஷெய்க் ஏ.சீ. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)
எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)
ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

**நிருவாக ஆசிரியர்**
ஆர். அப்துல்லாஹ் அஸ்ஸாம் (இஸ்லாஹி)

**பொறுப்பாசிரியர்**
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

**உதவி ஆசிரியர்**
ஜே.எம். அஸீம்

**பக்க வடிவமைப்பு**
ஏ.ஏ. முஹம்மத் பவாஸ்

**சந்தா விபரம்**
1 வருட சந்தா 550 /-
6 மாத சந்தா 275 /-



**தொடர்புகளுக்கு:**
**அகரம்**
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324, 011 720 6575
பெக்ஸ்: 011 2686030
Email: *aharamipc@gmail.com*


## உள்ளே...





அகரம் நினைவில் -2010 12





அன்றாட வாழ்வில் அரபு மொழி 16




English with Sister Rumman 18




டாக்டர் காரி மில்லா 6




உண்மையான வெற்றி எது? 34




வெற்றிக் குணங்கள் 22




பார்வைப் புலன் 4

இமாம் தாபித் பின் குர்ரா 28

**பாடத்திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| கணிதம் | 26 | தமிழ் | 32 |
| வரலாறு | 29 | விஞ்ஞானம் | 36 |

புலமைப் பரிசில் 39




மாணவர் அகரம் 8




கவிதைச் சரம் 11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 வருட நிறைவில் அகரம்

***கனிவான தம்பி தங்கைகளே!***

புதிய கல்வி ஆண்டுக்குள் காலடி எடுத்து வைத்திருக்கும் உங்களுக்கு முழுமனதோடு உங்கள் சஞ்சிகை 'அகரம்' தனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, உங்களது அறிவு, ஆன்மிகம், ஒழுக்கம், ஆளுமை மேலும் விருத்தியடைய வேண்டும் எனவும் அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றது.

2011 ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில் அகரம் தனது 5வது வருடத்தை நிறைவுசெய்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றோம் அல்ஹம்துலில்லாஹ். பல்வேறு சவால்கள், சிரமங்களுக்கு மத்தியிலும் அகரம் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது எனில், அதற்கு உங்களது பலமான ஒத்துழைப்பு முக்கியமானது என்பதனை நன்றியோடு நினைவுகூர்கின்றோம்.

பாடசாலைக் கலைத் திட்டத்தோடு இணைந்ததாக மாணவர்களது பொது அறிவு, ஆன்மிகம், சிந்தனை, இலக்கிய விருத்தி என்பவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலான சஞ்சிகையின் தேவை பலரால் உணரப்பட்டது. அவ்விடைவெளியை நிவர்த்திக்கும் வகையிலேயே அகரம் தனது பயணத்தை ஆரம்பித்தது. குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கும் மாணவர்களுக்கு தெளிவான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்குமான முயற்சியை அகரம் தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

தம்பி தங்கைகளே! உங்களுக்கும் எங்களுக்குமான இறுக்கமான உறவுப் பாலமாக அகரம் இக்கணப் பொழுதுவரை இருந்திருக்கின்றது. தொடர்ந்தும் அது வலுப்பெற வேண்டும் என நாங்களும் நீங்களும் இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்வோம்.

அகரம் முழுமை பெற்றுவிட்டது; அது கவர்ச்சியாகவும் தரமாகவும் வருகிறது என நாம் ஒருபோதும் கருதியது கிடையாது. அதன் வடிவமைப்பும் அது சுமந்துவரும் ஆக்கங்களும் மேலும் சிறப்பானதாக அமைய வேண்டும் என்பதே எமது அவா. எனவே, உங்களது ஆக்கபூர்வமான விமர்சனங்கள், கருத்துக்கள், ஆலோசனைகளை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவற்றை முழுமனதோடு அங்கீகரிப்போம்.

இன்ஷா அல்லாஹ், அகரம் எதிர்காலத்தில் புதுப்பொலிவுடன் வரவேண்டும் என ஆலோசிக்கின்றோம். மேலும் 5 வருட நிறைவை ஞாபகிக்கும் வகையில் எதிர்வரும் மார்ச் இதழை அதிக பக்கங்களுடன் சிறப்பிதழாக வெளியிடுவதற்கு ஆசிரிய பீடம் ஆலோசித்துள்ளது. உங்களது ஆக்கங்கள், கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் என்பவற்றையும் நீங்கள் எமக்கு அனுப்ப முடியும். நாங்களும் நீங்களுமாக கைகோர்த்து அகரம் சிகரம் தொட வழிசெய்வோம். சுவனம் எமது பாக்கியமாய் அமைந்திட இறைவனிடம் கையேந்துவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பினைக்கு ஓர் உண்மைச் சம்பவம்

# துணிச்சல் மிகு வாலிபர் அலி (ரழியல்லாஹூ அன்ஹூ)




நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மக்காவை விட்டு வெளியேறப் போகிறார்கள் என்பதை புரிந்து கொண்ட குறைஷியர்கள் தாருந் நத்வாவில் ஒன்றுகூடி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைக் கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டுகின்றார்கள். இறுதியில், ஒவ்வொரு கோத்திரத்தையும் சேர்ந்த பலசாலியான இளைஞர்களைத் தெரிவு செய்து, நபியவர்களது இல்லத்தை இரவில் முற்றுகையிட்டு நபியவர்கள் வெளியேறும்போது அவ்விளைஞர்கள் அனைவரும் ஒரே சந்தர்ப்பத்தில் தமது வாட்களினால் நபியவர்களைத் தாக்கி கொலை செய்வது என முடிவு செய்தார்கள்.

இவ்வேளையில், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹிஜ்ரத் செல்வதற்கான திட்டமிடலில் ஒன்றாக, தனது படுக்கையில் உறங்கிக் கொள்வதற்கு இளைஞர் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை நபியவர்கள் கேட்டுக் கொண்டபோது உயிராபத்து நிறைந்த அப்பொறுப்பை அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் துணிச்சலோடு ஏற்றுக் கொண்டார்கள்.

குறைஷிகள் தமது திட்டத்தை கச்சிதமாக நிறைவேற்றும் வகையில் தாம் ஏற்பாடு செய்த வாலிபர்களை நபியவர்களது வீட்டை முற்றுகையிடச் செய்தார்கள். அல்லாஹ்வின் பேருதவியோடு நபியவர்கள் வீட்டை விட்டு பாதுகாப்பாக வெளியேறிச் சென்று விட்டார்கள். இச்செய்தியை ஒருவர் அவ்வாலிபர்களிடம் சொன்னபோது கதவினிடுக்காக பார்த்து "இதோ முஹம்மத் தூங்குகின்றார். இது அவரது போர்வைதான்" என்று கூறி விடியும் வரை காத்திருந்தனர்.


காலையில் விரிப்பிலிருந்து எவ்வித அச்சமுமின்றி எழுந்து வரும் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களைப் பார்த்து முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பற்றி விசாரிக்க, "எனக்கு எதுவும் தெரியாது" என மிகச் சாதாரணமாக பதில் அளித்தமை அவர்களது துணிவையும் வீரத்தையும் மனஉறுதியையும் வெளிப்படுத்துகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எல்லைமுல்ல ஆலிப் அலி (இஸ்லாஹிய்யா வளாகம்) -



# பார்வைப் புலன்

பொதுவாக அனைத்து உயிரினங்களிடமும் காணமுடியுமான ஓர் உறுப்புத்தான் இந்தக் கண். ஒவ்வொரு உயிரினதும் கண்கள் வித்தியாசமான முறையில் படைக்கப்பட்டுள்ளன. சில உயிரினங்களின் கண்கள் முகத்தின் முன்பகுதியிலும் வேறு சில விலங்குகளின் கண்கள் முகத்தின் இரு புறங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. சிலந்திகள் அவற்றின் தலையைச் சூழ எட்டுக் கண்களைக் கொண்டுள்ளன. தும்பிகளின் இரண்டு பெரிய கண்களிலும் 30,000 சிறிய கண்கள் காணப்படுகின்றன. ஆந்தை, வௌவால், பூனை போன்ற உயிரினங்கள் இராக் காலங்களிலும் தெளிவாகப் பார்க்கும் அபார சக்தியைப் பெற்றுள்ளன. கழுகு போன்று கூர்மையான பார்வையை உடைய உயிரினங்களும் இருக்கின்றன.

மனிதர்களாகிய நாமும் எம்மைச் சூழவுள்ள இந்தப் பசுமையான உலகைப் பார்ப்பதற்கும் அதில் எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் எமது கண்களை மிகச் சிறப்பாகப் பயன்படுத்துகின்றோம்.

முகத்துக்கு அழகையும் வனப்பையும் கொடுப்பதில் கண்களது பங்களிப்பும் உண்டு. கண்குழி என்பினாலும் மென்மையான இமைகளினாலும் இமைகளின் நுனியில் உள்ள மயிர்களினாலும் எமது கண்கள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. மனிதனது கைவிரல் இரேகைகள் எவ்வாறு ஒருவரிலிருந்து இன்னொருவருடன் வித்தியாசப்படுகின்றனவோ அதேபோன்று மனிதனது கண் இரேகைகளும் ஒருவருக்கொருவர் வேறுபடுகின்றன. ஒருவரது கண் இரேகையை ஒத்ததாக இன்னுமொருவரது கண் இரேகை இருக்காது. அவ்வளவு நுணுக்கமாக அல்லாஹ் மனித உறுப்புகளைப் படைத்துள்ளான்.

எமது கோள வடிவமான கண்களின் விட்டம் 25mmகளாகும். இது வெளித் தோற்றத்தில் முக்கியமாக மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. கண்ணில் பெரிதாக வெண்மையாகக் காணப்படும் பகுதி 'ஸ்க்லேரா' (Sclera) என்றும் அடுத்த சற்று சிறிதாக அமைந்துள்ள கருமையான, வட்டமான பகுதி 'விழிவெண்படலம்' (Cornea) என்றும் விழிவெண்படலத்தின் மையத்திலுள்ள சிறிய புள்ளியளவிலான மணி 'கண்மணி' (Pupil) என்றும் அழைக்கப்படுகின்றன. அநேகமானவர்களுக்கு இந்த விழிவெண்படலப் பகுதி கறுப்பு நிறமுடையதாகவே காணப்படுகின்றது. ஆனால் சிலரது விழிவெண்படலம் நீல நிறத்திலும் கபில நிறத்திலும் இருக்கும். கண் மாற்றுச் சத்திர சிகிச்சை செய்வதென்பது முழுக் கண்ணையும் கழற்றி வேறு கண் மாற்றுவதல்ல. கண்ணில் உள்ள கண்மணி (pupil)யை மாத்திரம் மாற்றுவதாகும்.

சிசு தாயின் கர்ப்பப்பையில் வளரும் 42 ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளிலேயே கண் எளிமையான வடிவில் உருவாகி விடுகின்றது. ஆனால் 28 ஆம் வாரத்தில்தான் கண் விழித்திரை (Retina) வெளிச்சத்தை உணரும் தன்மையையும் பார்க்கும் ஆற்றலையும் பெறுகின்றது.

கவலை மேலிட்டால் அல்லது அழுகையினால் அல்லது மகிழ்வின் உச்சகட்டத்தின்போது ஏற்படும் ஆனந்தத்தினால் அல்லது கண்ணில் ஏதும் தூசு, துணிக்கைகள் சென்றுவிட்டால் உடனே எம் கண்கள் கண்ணீரைச் சொரிகின்றன. இதுபோன்ற நேரங்களில் கண்ணின் மேற்பகுதியின் ஓரத்தில் அமைந்துள்ள கண்ணீர் சுரப்பி (Tear Gland) கண்ணீரைச் சுரக்கின்றது. எமது கண்களைப் பாதுகாக்கவும் சுத்தம் செய்யவுமாக ஒரு நாளைக்கு இக்கண்ணீர் சுரப்பி ½ g கண்ணீரை உற்பத்தி செய்கின்றது.

அல்லாஹ் எமது கண்களை மேலும் கீழுமாகவும் இடது வலதாகவும் சுழற்ற முடியுமான விதத்தில் படைத்துள்ளமை ஓர் அருட்கொடையாகும். கண்ணுடன் பிணைக்கப்பட்டுள்ள ஆறு கண் தசைகளின் உதவியுடனே எம்மால் இதனைச் செய்ய முடிகின்றது.

இதுவரை எமது கண்களின் இயல்புகளைப் பற்றிப் பார்த்தோம். இனி கண்ணின் முக்கியமான தொழிற்பாட்டைப் பற்றிச் சற்று நோக்குவோம்.

எமது சூழலை நாம் நோட்டமிட்டால் அங்கு பல்வேறு வடிவங்களையுடைய, பல நிறங்களிலான, சமீபத்திலும் தூரத்திலுமாக பல பொருட்களைக் காண்கின்றோம். அப்பொருட்களின் தோற்றம் ஒளிக்கதிர் வடிவில் விழிவெண்படலம் (Cornea), கண்மணி (pupil), கண்வில்லை (Lens) என்பவற்றினூடாக கண்ணின் உட்சென்று கண் விழித்திரையில் (Retina) தலைகீழாக விழுகின்றது.

விழித்திரையில் தலை கீழாகப் பதியப்பட்ட பொருளின் ஒளிக்கதிர்கள் அதிலுள்ள Cones மற்றும் Rods எனும் ஒளியுணர்வாங்கிக் கலங்களால் மின் சமிக்ஞைகளாக (Electrical Signals) மாற்றப்பட்டு மூளையின் பிற்பகுதியில் உள்ள Primary Visual Cortex (PVC) என்பதன்பால் கொண்டு செல்லப்படுகின்றன. PVC என்பது மூளையில் உள்ள 2.5mm தடிப்புடைய ஆறு படைகளாலான 100 மில்லியனுக்கும் அதிகமான Neurons எனும் நரம்புக் கலங்களாலான ஒரு பகுதியாகும். கண்ணிலிருந்து மூளைக்கு இரசாயன சமிக்ஞைகளைக் கடத்தும் நரம்புக் கலங்கள் எக்கணப் பொழுதிலும் பத்து மில்லியனுக்கும் அதிகமான இரசாயன சமிக்ஞைகளை மூளைக்குக் கடத்தும் ஆற்றல் கொண்டவை சுப்ஹானல்லாஹ்! மருத்துவத் துறையில் கண் விழித்திரை பற்றியும் அதன் தொழிற்பாடுகள் மற்றும் பயன்பாடுகள் பற்றியும் முதன் முதலில் விளக்கிக் கூறியவர் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மருத்துவ மேதை இப்னு ருஷ்த் அவர்களாவார்.

அமெரிக்காவின் நரம்பியல் ஆய்வுக் கல்லூரியொன்று பார்வை நரம்பு தொடர்பாகவும் சிந்தனை நரம்பு தொடர்பாகவும் வெளியிட்ட ஓர் ஆய்வு முடிவு இங்கு நோக்கத்தக்கது. ஆண்களது மூளையில் ஒளிக் கதிர்களின் மின் சமிக்ஞைகளைக் கடத்துவதற்கென்று ஒரு நரம்பும் சிந்தனையைக் கடத்துவதற்கென்று ஒரு நரம்புமாக இரண்டு நரம்புகள் காணப்படுகின்றன. எனவே இச்செயற்பாடு ஆண்களிலே சிறப்பாக நடைபெறுகின்றது. ஆனால் ஒரு பெண்ணிடம் இவ்விரண்டையும் செய்வதற்கு ஒரு நரம்பே காணப்படுகின்றது. எனவே சிந்திப்பதிலும் கிரகிப்பதிலும் சற்று சிக்கலும் தெளிவின்மையும் ஏற்பட வாய்ப்புள்ளது என அவ்வாய்வு கூறுகின்றது. சாட்சி கூறும் விடயத்தில் ஒரு ஆணுக்கு இரண்டு பெண்கள் என்ற அடிப்படையில் இஸ்லாம் விதித்திருப்பதை இவ்விடத்தில் ஞாபகமூட்டலாம்.

கண்ணின் தொழிற்பாட்டிலும் பார்வைப் புலனிலும் உள்ள இறை வல்லமையைப் புரிந்து கொள்ள அதனுடன் சேர்த்து மூளையின் பார்வைப் பகுதிகளையும் சற்று விளங்கிக் கொள்ள முயற்சிப்போம்.

விழித்திரையில் தலைகீழாக விழும் ஒரு பொருளின் உருவத்தை மூளை அதன் சரியான தோற்றத்தில் சீராகக் காட்டுவதானது மற்றுமோர் ஆச்சரியமான, நுணுக்கமான, இதுவரை விஞ்ஞானிகளாலும் அறிய முடியாதுள்ள ஒரு மர்மமான விடயம். வல்லவன் அல்லாஹ்வே அதனை அறிந்தவன்!

நீங்கள் காற்றில் அசைந்தாடும் ஒரு பூச்செடியை சற்று உற்றுப் பாருங்கள். அப் பூச்செடியின் நிறம், அதன் இரு பரிமாண அல்லது முப்பரிமாண வடிவம், அதன்அசைவு, அதற்கும் உங்கள் கண்களுக்குமிடையில் உள்ள தூரம் போன்ற பல்வேறு தகவல்களை கண்களூடாக உங்கள் மூளை வெவ்வேறு பகுதிகளில் பிரித்தறிந்து சேமித்துக் கொள்கின்றது. பின்பு வெவ்வேறு பகுதிகளில் சேமித்துக் கொண்ட குறித்த செடியின் தகவல்கள் யாவும் மூளையின் அறியப்படாத ஒரு செயற்பாட்டினால் ஒன்று சேர்க்கப்பட்டு இறுதி வடிவம் வழங்கப்பட்டு சரியான தோற்றத்தில், அதே நிறத்தில், அதே அசைவுகளோடு எமக்குக் காட்சிப் படுத்தப்படுகின்றன.

(27ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல்குர்ஆனால் கவரப்பட்ட டாக்டர் காரி மில்லர்

அது 1977ஆம் ஆண்டு. டாக்டர் காரி மில்லர் கனடாவைச் சேர்ந்த சுறுசுறுப்பான கிறிஸ் தவப் போதகர். டொரன்டோ பல்கலைக்கழகத்தின் கணிதத்துறை, அளவையியல் (லொஜிக்) துறைப் பேராசிரியர். இவர் புனித அல்குர்ஆனில் காணப்படும் வரலாறு மற்றும் அறிவியல் சார்ந்த பிழைகளைக் கண்டுபிடிப்பதன் மூலம் கிறிஸ்தவத்துக்கு மாபெரும் தொண்டாற்ற முற்பட்டிருந்தார். தான் மேற்கொள்ளப்போகும் தொண்டானது தனக்கும் தன்னைப் போன்ற கிறிஸ்தவப் போதகர்களுக்கும் முஸ்லிம்களை கிறிஸ்தவத்தின் பால் அழைப்பதற்குப் பெரிதும் துணைபுரியும் என்றும் கருதினார்.

அல்குர்ஆனில் பிழைகளைத் தேடி ஆய்வு செய்து அவற்றைப் பகிரங்கப்படுத்தி இழிவு படுத்தும் நோக்கில் அதனை ஆய்வு செய்ய ஆரம்பித்த அவரை அல்குர்ஆனின் நடுநிலையான போக்கு முற்றிலும் திசை திருப்பி விட்டது. இறுதியில் ஞானம் மிக்க வேதமாகிய அல்குர்ஆனை விளம்பரப்படுத்துவதற்கு அவரது ஆய்வும் தெளிவுரையும் பெரும் பங்காற்றின. நிச்சயமாக அவர் அல்குர்ஆனை மிக அழகிய முறையில் ஆராய்ந்து விட்டார் என்றே கூறவேண்டும்.

அல்குர்ஆனின் அற்புதத் தன்மையால் கவரப்பட்ட மில்லர் (The Amazing Quran) வியப்பூட்டும் குர்ஆன் என்ற பெயரில் ஒரு நூலையே எழுதி விட்டார், எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவரை முதன்முதலில் திடுக்கிடச் செய்த விடயம் குர்ஆனின் சவால்விடும் போக்கேயாகும். இவ்வாறு சவால்விடும் வசனங்கள் அல்குர்ஆனின் பல இடங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக, அல்குர்ஆனைப் போன்ற ஒரு சூராவையோ, பத்து வசனங்களையோ அல்லது ஒரு வசனத்தையேனும் கொண்டு வரும்படி குர்ஆன் சவால் விட்டது.

எனவே, இச்சவாலை வெற்றி கொள்வதற்குத் தன்னால் முடியும் என்ற நம்பிக்கையுடன் தேடலை ஆரம்பித்த அவர், ஈற்றில் அதில் காணப்பட்ட வியக்கவைக்கும் அறிவியல் உண்மைகளால் கவரப்பட்டு தனது சவாலுக்குத் தானாகவே முற்றுப்புள்ளி இட்டுக் கொண்டார். வியப்பூட்டும் அல்குர்ஆன் என்ற நூலில் டாக்டர் மில்லர் பின்வருமாறு கூறுகின்றார்:

1. ஒரு நூலை எழுதிவிட்டு, இந்நூலில் எந்தத் தவறும் இல்லை என்று கூறும் தைரியம் உலகில் எந்தவொரு எழுத்தாளனுக்கும் இல்லை. எனினும், அல்குர்ஆன் இதற்கு முற்றிலும் நேர்மாறாக இதில் தவறுகள், பிழைகள் எதுவுமே இல்லை என்று அறுதியிட்டுக் கூறுகின்றது. மட்டுமன்றி அதில் எந்தத் தவறுமில்லை. அவ்வாறே இனி மேலும் அதில் எந்தத் தவறும் இருக்காது என்றும் சவால் விடுகின்றது.

2. நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது தனிப்பட்ட உலக வாழ்வுடன் தொடர்பான விடயங்கள் அதில் காணப்படுவதில்லை. உதாரணமாக அவரது மனைவி கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் மரணம், அவரது ஆண், பெண் பிள்ளைகளது மரணம் போன்ற எதனையும் அல்குர்ஆன் குறிப்பிடவில்லை. மாறாக, தஃவா எனும் புனித அழைப்புப் பணியில் ஈடுபட்ட போது நபியவர்களுக்கு நிகழ்ந்த சில துயர்மிகு சம்பவங்களையே அது கோடிட்டுக் காட்டியது. இத்துயர்மிகு நிகழ்வுகள் அனைத்தும் வெற்றியையே பறைசாற்றிக் கொண்டிருந்தன. மேலும், நபியவர்களுக்கு ஏற்பட்ட வெற்றிகளைக் கோடிட்டுக் காட்டிய வசனங்கள், வெற்றியைக் கண்டு ஏமாற்ற மடைந்து விடாது இருக்குமாறும் தியாகத்தையும் உழைப்பையும் மென்மேலும் அதிகரிக்கும்படியும் அழைக்கின்ற அமைப்பிலேயே காணப்பட்டன.

எந்தவொரு மனிதனும் தனது வரலாற்றை எழுதும்போது வெற்றிகளை மிகைப்படுத்திக் கூறிவிட்டு, தோல்விகளுக்கு நியாயம் கற்பிக்கவே முனைவர். எனினும் அல்குர்ஆனோ முற்றிலும் நேர்முரணாகக் காணப்பட்டது. அல்லாஹ்வுக்கும் ஏனையோருக்கும் இடையிலுள்ள தொடர்புகளுக்கான பொதுவிதிகளை முன்வைக்கின்ற அளவுக்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்துக்காக மட்டும் அது வரலாறு படைக்கவில்லை.

(தொடரும்...)

நன்றி: இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹதீஸ் பூங்காவிலிருந்து

الحديث الشريف

ஏ.ஆர்.எம். ஸஜீத் (இஸ்லாஹி)

## அல்குர்ஆனைக் கற்போம்; கற்றுக் கொடுப்போம்!

عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانٍ (رَضِيَ) قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ (صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ)

خَيْرُكُمْ مَنْ تَعَلَّمَ الْقُرْآنَ وَعَلَّمَهُ (رَوَاهُ الْبُخَارِيْ)

உஸ்மான் இப்னு அப்பான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.
"உங்களில் சிறந்தவர் அல்குர்ஆனைக் கற்று அதனை பிறருக்கும் கற்றுக் கொடுப்பவரே."
(நூல்: அல்புகாரி, முஸ்லிம்)

இந்த உலகுக்கு நேர்வழிகாட்டுவதற்காக அல்லாஹ் இறக்கியருளிய வேதங்களை நாம் ஈமான் கொண்டிருக்கிறோம். இந்த வேதங்களில் இறுதியானதாகவும் உலகம் அழியும் வரை அகிலத்தாருக்கு வழிகாட்டுவதற்கும் இறக்கியருளப்பட்டதே அல்குர்ஆன்.

அல்லாஹ் அருள்மறையில் பின்வருமாறு எடுத்துரைக்கின்றான்:

"அலிப்லாம்மீம். இது வேதமாகும். இதில் எத்தகைய சந்தேகமுமில்லை. தக்வா உடையோருக்கு நேர்வழிகாட்டியாகும்." (அல்பகரா: 2)

யார் நேர்வழி பெற்றுக் கொள்ளும் நன்நோக்கில் அதனை அணுகுகின்றாரோ அவருக்கு அது நேர்வழி காட்டுகின்றது. ஸஹாபாக்கள் தமது வாழ்வின் எப்பிரச்சினைக்கும் அல்குர்ஆனிலிருந்தே தீர்வுகளைப் பெற்றுக் கொண்டார்கள். தம்மை நன்நெறிப்படுத்தும் புனித வழிகாட்டியாக குர்ஆனை மாத்திரமே அவர்கள் கண்டார்கள்.

நபியவர்களும் இந்த அல்குர்ஆனிய வாழ்க்கையை வாழ்ந்து காட்டியதனை நாம் பார்க்கலாம்.

அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களிடம் பெருமானாரின் வாழ்க்கை தொடர்பில் வினவப்பட்டபோது, **"நபியவர்களின் வாழ்க்கை அல்குர்ஆனாகவே இருந்தது"** என பதிலளித்தார்கள். (அந்நஸாஈ)

இத்தகைய சிறப்புமிக்க அல்குர்ஆனைக் கற்று அதனைப் பிறருக்கும் கற்றுக் கொடுக்கும் மனிதனை உயர்ந்த மனிதனாக நபியவர்கள் மேற்கூறப்பட்ட ஹதீஸின் வாயிலாக புகழ்ந்துரைத்துள்ளார்கள்.

இறைவனின் விருப்பத்திற்கமைய வாழ்வை அமைத்துக் கொள்வதற்கு எத்தகைய அறிவுரைகளும் வழிகாட்டல்களும் தேவையோ அவை அனைத்தும் எக்குறையுமின்றி அல்குர்ஆனில் பொதிந்துள்ளது. இத்தகைய அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் கடைபிடிப்பது மனிதன் மீது கடமையாக உள்ளது. அவற்றுக்கு எதிரானவற்றை செய்வது பாவமாகும். இதனைப் பின்பற்றுகின்ற மனிதன் பண்பாட்டினதும் நாகரிகத்தினதும் உச்ச நிலையை அடைந்து விடுகின்றான்.

எனினும், சமூகத்திற்கு வழிகாட்டியாகவும் நல்லுபதேசமாகவும் இறக்கப்பட்ட, நாம் ஈமான் கொண்டிருக்கின்ற அல்குர்ஆனுடனான எமது உறவு எவ்வாறிருக்கின்றது என்பதனை எம்மை ஒரு கணம் சுயவிசாரணை செய்து கொள்வதன் மூலம் புரிந்து கொள்ள முடியும்.


(31ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் அகரம்



## அறிந்து கொள்ள வேண்டியவை

| | |
|---|---|
| கறையானால் அரிக்கப்படாத தாவரம் எது? | தேக்கு, வேம்பு |
| உலகிலேயே குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட நாடு எது? | வத்திக்கான் |
| சமுத்திரங்களில் மிகவும் ஆழமானது எது? | மரியானா ஆழி |
| மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர்? | மைக்கல் பரடே |
| மோட்டார் காரைக் கண்டுபிடித்தவர்? | புல்மன் |
| மிகப் பெரிய கோள்? | வியாழன் |
| உலகிலேயே பெரிய ஏரி? | சூபீரியர் ஏரி |

அஸ்பா ஜமால்தீன், எஹலியகொட

## இலங்கை- தெரிந்து கொள்வோம்

ஜ. அஸ்கா பானு, பள்ளிவாசல் துறை மு.ம.வி. கல்பிட்டி

| | | |
|---|---|---|
| 1. | இலங்கை குடியரசானது எப்போது? | 22.05.1972 |
| 2. | இலங்கையை ஆட்சி செய்த கடைசி மன்னன் யார்? | ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் |
| 3. | இலங்கையில் அதிக குளிருடைய இடம் எது? | கந்தப்பளை |
| 4. | இலங்கையை முதன் முதலில் கைப்பற்றிய அந்நியர் யார்? | போர்த்துக்கேயர் |
| 5. | இலங்கையை இறுதியாக ஆண்ட அந்நியர் யார்? | ஆங்கிலேயர் |
| 6. | இலங்கையின் மிகப் பெரிய ஏரி எது? | சேனநாயக்க சமுத்திரம் |
| 7. | தலதா மாளிகையைக் கட்டுவித்த மன்னன் யார்? | கீர்த்தி ஸ்ரீ மேகவர்ணன் |
| 8. | இலங்கை அரசினது வங்கி எது? | மத்திய வங்கி |
| 9. | செய்திப் பரிவர்த்தனை நிலையம் எங்குள்ளது? | பாதுக்கை |
| 10. | இலங்கையின் தேசிய இலச்சினையை அமைத்தவர் யார்? | மாபுலகம விபுலசார ஹிமி |
| 11. | இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட ஆண்டு எது? | 1931 |
| 12. | இலங்கையின் பண்பாட்டு முக்கோணம் எனப்படும் இடங்கள் எவை? | பொலன்னறுவை, கண்டி, அநுராதபுரம் |

## சிந்தனைத் துளிகள்

ஆர்.எம். பாரீஸ், தரம்- 09,
தி/ அல்- அக்ஸா கல்லூரி, கிண்ணியா

| | | |
|---|---|---|
| 1. | விண்வெளியில் அமைக்கப்பட்ட விண்வெளி ஆய்வுகூடத்தின் பெயர் | - மீர் |
| 2. | இலங்கையின் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டிய பெருமைக்குரிய ஜனாதிபதி | - மஹிந்த ராஜபக்ஷ |
| 3. | பாராளுமன்றத்தைச் சுற்றி ஓடும் நதியின் பெயர் | - தியவன்ன ஓயா |
| 4. | மிகச் சிறிய தேசிய கீதம் உள்ள நாடு | - ஜப்பான் |
| 5. | சூரிய சக்தியை அறிமுகப்படுத்திய நாடு | - இஸ்ரேல் |
| 6. | 2010ம் ஆண்டு 16வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற நாடு | - சீனா |
| 7. | கியூபாவின் புதிய ஜனாதிபதி (2008) | - ராவல் கஸ்ட்ரோ |
| 8. | 2009ல் மரணித்த பிரபல பொப்பிசைப் பாடகர் | - ஜோசப் மைக்கல் ஜெக்ஸன் |
| 9. | ஜப்பானில் ஆதிவாசிகளாகக் கருதப்படுவோர் | - ஐனு இனத்தவர் (Ainu People) |
| 10. | ஆசியாவில் மிக உயரமான கட்டிடத்தைக் கட்ட திட்டமிடும் அரசு | - மகா ராஷ்திரா மாநில அரசு (இந்தியா) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா. செய்திகள்

- ஐக்கிய நாடுகள் சபைக்கு அப்பெயரைச் சூட்டியவர் அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வெல்ட்.
- ஐ.நா சபையின் முதல் கூட்டத்தில் 50 நாடுகள் கலந்து கொண்டன.
- ஐ.நா தினம் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 24ந் திகதி கொண்டாடப்படுகின்றது.
- ஐ.நா சபையின் கொடியில் இடம்பெற்றிருக்கும் இலை ஒலிவ் இலை.
- ஐ.நா சபையின் முதல் பொதுச் செயலாளர் இங்கிலாந்து நாட்டை சேர்ந்தவர்.
- ஐ.நா சபையில் இலங்கை இணைந்து கொண்ட ஆண்டு 1955.


**சியாட்.எம். ஜாவிட், தரம்-10**
**க/ உடுதெனிய மு.ம.வி**

## உங்கள் சிந்தனைக்கு...

- உண்மையான நட்பை ஆபத்தில் அறியலாம்.
- எந்தவொரு காரியத்தை செய்யும் முன்பும் ஒரு தடவைக்கு மூன்று தடவை யோசித்து செய்ய வெண்டும்.
- நாம் நினைப்பது நடக்காவிட்டால் நடப்பதை நல்லது என எண்ணிக் கொள்ள வெண்டும்.
- நீ முன்னேற வேண்டுமாயின் பிறரின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்காதே!

**எம்.இஸட்.எம். அஹ்ஸன், தரம்- 8**

## ஓர் உயிர் கொல்லியின் சுயவிபரம்



| | |
|---|---|
| நிரந்தரப் பெயர் | :நுளம்பு |
| விஷேட பெயர் | :டெங்கு நுளம்பு |
| பால் | :பெண் |
| வாழிடம் | :தூய நீர் |
| தொழில் | :நோய்களைப் பரப்புவது |
| தொழில் செய்யும் காலம் | :காலை 7.00-10.00, மாலை 3.00-5.00 மணி வரை |
| விஷேட தொழில் | :டெங்கு நோயைப் பரப்புவது |
| விரும்பி உண்பது | :மனித இரத்தம் |
| நண்பர்கள் | :தேங்கி நிற்கும் நீர் |
| எதிரிகள் | :வைத்தியர்கள், நுளம்புச் சுருள், நுளம்பு வலை, அடித்து விரட்டும் கை |
| மறக்க முடியாதது | :நுளம்பை அழிக்க உருவான மருந்து உற்பத்திகள் |
| எதிர்பார்க்காதது | :அழியாமல் தப்பிப் பிழைப்பது |
| மறக்க நினைப்பது | :கண்டுபிடிக்கப்படுகின்ற மருந்துகள் எங்களை அழிக்கலாம் என்ற உண்மையை |
| சிரிக்க வைப்பது | :மனிதனுக்கே தெரியாமல் இரத்தத்தை எடுத்து நோயை புகுத்துவது |
| என்னை மகிழ்விப்பது | :குறுகிய காலத்திற்குள் கிடைத்த மிகப் பெரிய விளம்பரம் |
| என்னை வருத்தியது | :மனிதனைக் கொல்ல வந்தவன் என்ற வர்ணனை |
| நான் வெறுப்பது | :குறுகிய காலத்தில் வரும் மரணத்தை |
| இதுவரை செய்த சாதனை | :உலகில் அனைத்து இடங்களிலும் பரவிக் காணப்படுவது |
| எனக்குள் நான் விரும்பியது | :சத்தமின்றி உதிரத்தை உறிஞ்சும் உறிஞ்சியை |
| எனக்குள் நான் வெறுப்பது | :எப்போதும் என்னைக் காட்டிக் கொடுக்கும் "ஙொய்" என்ற சப்தம் |
| இறுதியாக சொல்ல நினைப்பது | :உயிர்களைக் கொல்வது பாவம் என்பதை உணர்ந்து மனிதன் செயற்பட வேண்டும் என்பதை |

**எம்.என். நுப்லா, அல்மின்ஹாஜ் தேசிய பாடசாலை, ஹபுகஸ்தலாவ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மினித் தகவல்கள்

* உலகிலேயே மிக நீளமான மலை
  அந்தீஸ் மலை
* உலகில் எரிமலை இல்லாத கண்டம்
  அவுஸ்திரேலியா
* கடல் மட்டத்திற்கு கீழே உள்ள நாடு
  நெதர்லாந்து
* ஐ.நா. சபையின் சின்னம்
  ஒலிவ் மரக்கிளை
* நவீன ஓவியங்களின் தந்தை
  பிக்காசோ
* உடலை கெடாமல் வைத்திருக்கும் திரவம் ஃபார்மலின்
* உலகின் மிக நீளமான குகை
  -மாமத் குகை (560 Km)
* விமான விபத்துக்களின் காரணத்தை அறிய உதவும் சாதனம்
  -கறுப்புப் பெட்டி (Black box)

**எம்.என்.எப். நிப்லா, தரம்- 09**
**மடிகே முஸ்லிம் மகா வித்தியாலயம்,**
**முதுன்துவ**

## சிந்திக்க சில வரிகள்

- உன் கௌரவம் உன்னுடைய நாக்கின் நுனியில் இருக்கிறது.
- தேன் இனிப்பாக இருந்த போதிலும் அதை முள்ளோடு சுவைக்காதே.
- தொடங்கிப் பாதியில் விட்டு விடுவதை விட தொடங்காமல் இருப்பது மேலானது.
- நீ பலமுள்ளவனாக இருக்க விரும்பினால் உன்னுடைய பலவீனங்களை தெரிந்து கொள்.
- வாழ்க்கை என்பது சந்திரன் மாதிரி. சில சமயம் இருட்டு சில சமயம் முழு நிலவு.
- பழுக்காத பழங்களை அணில் கடிப்பதுமில்லை பக்குவப்படாத நண்பர்களோடு அறிவாளிகள் பழகுவதுமில்லை.
- காலத்தை வீணடிப்பவன் வாழத் தெரியாதவன்.

**முபீஸ்.கே. ரஹ்மான்**

## நைல் நதி நாகரிகம்

கி.மு. 3000ஆம் ஆண்டளவில் 'மெனஸ்' என்ற மன்னன் இந்நாகரிகத்தைத் தோற்றுவித்தான். எனினும், 'பராவோ' வம்ச மன்னர் காலத்தில்தான் இந்நாகரிகம் புகழ் பெற்று விளங்கியது. இவ்வம்ச மன்னர்கள் அதிகளவு அதிகாரங்களையும் செல்வங்களையும் பெற்று விளங்கினர். இவர்களின் தலைநகர் 'மெம்பீஸ்' ஆகும். அம்மக்கள் அரசனை தெய்வமாகக் கருதினர். மரணத்தின் பின் வாழ்வு உண்டென நம்பிய இவர்கள், இறந்த மன்னனின் ஆவி நாட்டைக் காப்பதாக எண்ணினர். இதனால் தான் இறந்த மன்னர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த அவர்களது கல்லறைகளில் (பிரமிட்) அவர்கள் விரும்புகின்ற பல பொருட்களை வைத்தார்கள்.

**என்.எப். அய்மா, தரம்- 10**
**கமு/ அல்-ஹம்றா வித்தியாலயம், மருதமுனை**

## இலங்கையின் பிரசித்த நகரங்கள்

- ❑ நாவுல -அன்னாசி
- ❑ பட்டலிய -முந்திரிகை
- ❑ யாழ்ப்பாணம் -புகையிலை
- ❑ இரத்தினபுரி -இரத்தினக்கல்
- ❑ சிலாபம் -முத்து
- ❑ மாத்தறை -தயிர்
- ❑ எம்பக்கே -மரக்கட்டயம்
- ❑ நாத்தாண்டிய -கண்ணாடி
- ❑ நீர் கொழும்பு -இறால், நண்டு
- ❑ வேவல்தெனிய -பிரம்புப் பொருட்கள்
- ❑ களனி -மட்பாண்டம், டயர்
- ❑ மல்வானை -ரம்புட்டான்
- ❑ அம்பேவல -கட்டிப்பால்
- ❑ மொரட்டுவ -பலகை, தளபாடம்
- ❑ தங்கொட்டுவ -பீங்கான்

**எம்.என்.யூ. நஸீமா, தரம்- 11**
**குளி/ மடிகே அனுக்கன மு.மு.வி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முஹர்ரமே நீ வருக

வருடா வருடம்
வருவாய் – நீ
எங்கள் வாழ்வில்
புது நாளாய் முஹர்ரமே!

பத்திரமாய்
பன்னிரண்டு மாதமதில்
முத்திரையாய்
முதல் மாதம்
முஹர்ரம் நீயே!

கலிமாச் சொன்ன
மக்களுக்கு–பல
கனவுகள் சுமந்து
நீ வருவாய்

சிறப்புக்கள்
பல – நீ
தர வேண்டும் – எங்கள்
சிந்தையிலும் செயல்களிலும் சில
மாற்றங்கள் வர வேண்டும்

இல்லாதார் வாழ்வினிலும்
இல்லையென்ற சொல்லகற்றி
இஸ்லாமிய வாழ்வு வர
நீ வருவாய் முஹர்ரமே
நீ வருவாய் முஹர்ரமே!

*றஸ்லா றஸீன்*
*தரம்-11*
*முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, கள்-எலிய*

# தாய்



தத்தித் தத்தித் தவழ்ந்த என்னை
தட்டித் தட்டி நிமிரச் செய்தாய்
உன் கரத்தால்

கல்வி எனும் பெருஞ் செல்வத்தை
கற்றிடச் செய்தாய்
உன் மனதால்

விதையாய் முளையாய்
செடியாய், மரமாய்
வளர்த்தெடுத்தாய்
நீயே...

உன் அன்பும் ஆசியும்
எமக்கு எப்போதும்
கிடைக்க வேண்டும்

*எப். சஸ்னா பாரூக்*
*தரம் -11*
*பு/கொத்தாந்தீவு மு.ம.வி*

# அன்றும் இன்றும்

அன்று
ஒவ்வொரு வீட்டிலும் ஒலித்த
இனிய கிராத் ஓசை
இன்று
திரைப் பெட்டியின் பின்னால்
ஒளிந்து கிடப்பது உண்மைதான்!

அன்று
சுவனத்தைக் குறியாகக் கொண்டு
கண்ணியம் பேணிய
எம் மாதர் குலத்தின் தியாகங்கள்
இன்று
மதி கெட்ட (அ)நாகரிகத்தால்
மறைந்து போயிருப்பது உண்மைதான்!

அன்று
மிம்பர் மேடையில்
லயித்திருந்த இதயங்கள்
இன்று
திரைக்கூடங்களை நோக்கி
ஈர்க்கப்படுவது உண்மைதான்!

*அய்மா நிஃமத்துல்லாஹ்*
*மருதமுனை*

# நேசமுள்ள பூக்கள்

காலை எழுந்தவுடன்
என்னைப் பார்த்து
புன்னகை புரியும்
பூக்கள்

காலை வேளையிலே
என்னைப் பார்த்து
கண் சிமிட்டும்
பூக்கள்

மணத்தை வீசி
என் மனதை
மயங்க வைக்கும்
பூக்கள்

என்றும் என்
மனதை மகிழ
வைக்கும் என் நேசமுள்ள
பூக்கள்



*எம்.என்.யூ. நஸீமா*
*தரம் - 10*
*குளி/ மடிகே அனுக்கண மு.ம.வி.*

அகரத்தின் ஐந்து வருட பூர்த்தியை முன்னிட்டு மார்ச் மாத இதழ் விஷேட இதழாக வெளிவர இருப்பதால் அவ்விஷேட இதழுக்கான கவிதைகளை பெப்ரவரி மாதத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












# அகரம் நினைவில் -2010











## ஜனவரி

4 உலகின் மிக உயர்ந்த கட்டடம் டுபாயில் திறந்து வைக்கப்பட்டது.



6 கலாநிதி அப்துல் அழீம் அத்தீப் அவர்கள் வபாத்தானார்கள்.

துருக்மெனிஸ்தானில் இருந்து ஈரானுக்கு இயற்கை வாயுக் குழாய் திறந்து வைக்கப்பட்டது.



11 இஸ்ரேல்-எகிப்து இடையில் புதிய தடைச்சுவர் எழுப்பப்பட்டது.

16 அல்இஃவானுல் முஸ்லிமூன் அமைப்பின் புதிய தலைவராக உஸ்தாத் முஹம்மத் பதீஃ அப்துல் மஜீத் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.



20 டுபாயிலுள்ள பிரபல ஹோட்டலொன்றில் வைத்து ஹமாஸின் சிரேஷ்ட தலைவர் மஹ்மூத் அப்துல் ரவூப் மப்ஹூஹ் மொஸாட் உளவாளிகளால் படுகொலை செய்யப்பட்டார்.



25 ஈராக்கில் கெமிக்கல் அலி தூக்கிலிடப்பட்டார்.



26 இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் ஆரம்பமாகியது.

27 இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ வெற்றி.



29 சோமாலியத் தலைநகர் மொகாடிசுவில் பெரு வெள்ளம் காரணமாக பலர் உயிரிழந்தனர்.

## பெப்ரவரி



1 தென்னிந்திய இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானுக்கு இரண்டு கிராமி விருதுகள் கிடைத்தன.



2 சுவிஸ் அரசியல்வாதியும் சுவிஸ் நாட்டிலுள்ள பள்ளிவாசல்களின் மினாராக்களுக்கு எதிராக பிரசாரம் செய்தவருமான டேனியல் ஸ்ட்ரீக் (Daniel Streich) இஸ்லாத்தைத் தழுவினார்.



3 சூடான் அதிபர் உமர் அல் பஷீர் மீது தார்பூர் போர் தொடர்பாக கொலைக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும் என பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றம் அறிவித்தது.

4 தாம் புதிதாக எண்ணெய்க் கிணறு ஒன்றைக் கண்டுபிடித்திருப்பதாக டுபாய் அறிவித்திருக்கிறது.



20 ஈழத்து நாடக மற்றும் இசைக் கலைஞர் ஸ்ரீதர் பிச்சையப்பா காலமானார்.

23 துருக்கியில் அரசுக்கு எதிராக இராணுவச் சதி முயற்சி இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ச்

8 துருக்கியில் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டது.




10 2010 ஆம் ஆண்டின் உலகின் பெரும் பணக்காரராக மெக்சிகோவின் கார்லொஸ் சிலிம் (carlos slim) என்பவரை ஃபோர்ப்ஸ் இதழ் தெரிவு செய்தது. பில் கேட்ஸ் இரண்டாம் இடத்தில் உள்ளார்.



10 ஷைகுல் அஸ்ஹர் ஷெய்க் தன்தாவி ஸஊதியின் தலைநகரான ரியாத்தில் வபாத்தானார். இவர் 1928 ஒக்டோபர் 28 ஆம் திகதி எகிப்தில் பிறந்தார்.


11 கிழக்கு ஜெருசலேம் நகரில் மேலும் ஆயிரம் குடிமனைகளைக் கட்டப்போவதாக இஸ்ரேல் அறிவித்தது.



சிலியின் புதிய அரசுத் தலைவராக செபஸ்டியான் பினேரா பதவியேற்றார்.



12 ஐபிஎல் துடுப்பாட்டப் போட்டிகள் மும்பையில் ஆரம்பமாயின.



12 பேராசிரியர் பெரியார்தாசன் சஊதி அரேபியாவின் தலைநகரான ரியாதில் வைத்து இஸ்லாத்தைத் தழுவினார்.



13 உலகக்கிண்ண ஹொக்கி இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

14 மத்திய ஜப்பானிலும் இந்தோனேசியாவிலும் முறையே 6.6, 6.4 அளவு நிலநடுக்கங்கள் பதிவாயின.




20 நேபாளத்தின் முன்னாள் பிரதமர் கொய்ராலா காலமானார்.

26 தென் கொரியக் கடற்படைக் கப்பல் வட கொரிய கடற்பரப்பில் மூழ்கியது.

28 சீனாவில் சுரங்கம் ஒன்றினுள் வெள்ளம் புகுந்ததில் 152 பேர் சுரங்கத்தினுள் சிக்கினர்.


# ஏப்ரல்

13 சீனாவின் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர்.



14 டாக்டர் இஸ்ரார் அஹ்மத் அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

16 பிரிக் நாடுகளின் உச்சிமாநாடு பிரேசிலின் தலைநகரில் ஆரம்பமானது.



உலகின் இரண்டாவது உயரமான கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் மக்காவில் ஆரம்பம்.

19 செவ்வாய்க்கு மனிதனை அனுப்பும் அமெரிக்காவின் முயற்சி 2035 இற்குள் சாத்தியம் என நாசா அறிவித்தது.

21 இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் இறுதி முடிவுகள் வெளியிடப்பட்டன.

26 2010 இந்தியன் பிரிமியர் லீக் கோப்பையை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வென்றது.





27 உலகின் மிக உயரமான 14 மலைச்சிகரங்களிலும் ஏறிய முதல் பெண் என்ற பெருமையை தென் கொரியாவின் ஓ யூன் சூன் பெற்றார்.

சூடான் தேர்தலில் உமர் அல்பஷீர் வெற்றி பெற்றார்.

29 பொது இடங்களில் முஸ்லிம் பெண்கள் முக்காடிட்டுக் கொள்வது பெல்ஜியத்தில் தடை செய்யப்பட்டது.

30 உலகின் மிகப்பெரும் வர்த்தகக் கண்காட்சியாகக் கருதப்படும் எக்ஸ்போ 2010 சீனாவின் ஷங்காய் நகரில் திறந்து வைக்கப்பட் டது.


பொது சன நூலகம் யாழ்ப்பாணம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே



2 மெக்சிக்கோ வளைகுடா எண்ணெய்க் கசிவு அமெரிக்கக் கரையை அடைந்தது. இந்த விபத்தால், 400 வகை கடல்வாழ் உயிரினங்களுக்கும் 34,000 பறவைகளுக்கும் ஆபத்து ஏற்பட்டது. மே 30ஆம் திகதி வரை 491 பறவைகள், 227 கடல் ஆமைகள், 27 டொல்பின்கள் இறந்தன. அப்பகுதியில் மீன்பிடித் தொழில் முற்றாக பாதிக்கப்பட்டது.

# ஜூன்




9 பாகிஸ்தானில் பேஸ்புக் இணையதளம் தடை செய்யப்பட்டது.

"Everybody draw Mohamme Day" எனும் பெயரில் முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் உருவப் படத்தை வரையும் போட்டியொன்றை பேஸ் புக் நடத்தியதை தொடர்ந்தே இத்தடை விதிக்கப்பட்டது.

இதற்கு எதிராக முஸ்லிம் நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட பகிஷ்கரிப்புகளால் அதனை ஆரம்பித்து இரு நாட்களுக்குள் 2 பில்லியன் பவுண் நட்டமடைந்தது. இந்த பேஸ் புக் இணையதளத்துக்கு மாற்றீடாக 'மில்லத் பேஸ் புக்' என்ற இணையதளத்தை ஆரம்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

30 துருக்கியிலிருந்து காஸாவுக்கு நிவாரணப் பொருட்களை ஏற்றிச் சென்ற கப்பல்கள் மீது இஸ்ரேலிய கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். இதனால் பலஸ்தீன் ஆதரவு செயற்பாட்டாளர்கள் 9 பேர்



உயிரிழந்ததுடன் 50 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் துருக்கியைச் சேர்ந்தவர்களாவர்.

# ஜூலை

'விக்கிலீக்ஸ்' இணைய தளம் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர் நடத்திவருகின்ற ஆக்கிரமிப்புப் போர் பற்றிய 76,000 இராணுவ இரகசியங்களை ஜூலையில் அம்பலப்படுத்தியது.






36 வயதுடைய அவுஸ்திரேலியரான ஜூலியன் அஸ்ஸேஞ்ஜ் (36) என்பவரால் 2006ம் ஆண்டு இவ்விணையம் நிறுவப்பட்டது.

# ஆகஸ்ட்





1 பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் வெள்ளத்தினால் 900 பேர் உயிரிழப்பு.

பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் 20 மில்லியன் மக்கள் (மொத்த சனத்தொகையில் 12%) பாதிக்கப்பட்டனர்.

பாகிஸ்தானில் கடந்த 80 வருட காலத்திற்குப் பின்னர் ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தத்தில் சிக்கி 1700 பேருக்கு மேற்பட்டோர் மரணித்தனர். 1 பில்லியன் டொலர் பெறுமதியான விவசாயம் அழிவடைந்தது. அரிசி, சோளம், பருத்தி மற்றும் கரும்பு முதலிய சுமார் 7 இலட்சம் ஹெக்டயர் பயிர்கள் அழிவடைந்ததுடன் 80%ஆன பண்ணை விலங்குகள் உயிரிழந்ததாகவும் ஐ.நா. வின் உலக உணவுத் திட்டம் (W.F.P.) மதிப்பிட்டது.

2 யுனெஸ்கோவின் உலக பாரம்பரியத் தளங்களில் இலங்கையின் மலையகம் இணைக்கப்பட்டது.

10 சர்வதேச முஸ்லிம் உம்மத்தின் மிகப் பெரும் இஸ்லாமிய அறிஞர் கலாநிதி அல் அஸ்ஸால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். இவர் அல்இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரும் பாகிஸ்தான் இஸ்லாமாபாத் சர்வதேச பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் முதல்வருமாவார்.



## ஒக்டோபர்



1 ஐரோப்பாவின் முதலாவது 3டி தொலைக்காட்சிச் சேவை ஸ்கை 3 (sky3) ஐக்கிய இராச்சியத்தில் ஆரம்பமானது.

## நவம்பர்

1 பிரேசிலின் முதலாவது பெண் அரசுத் தலைவராக டில்மா ரூசெப் தெரிவானார்.


5 அவுஸ்திரேலியாவில் ஒரு நாள் துடுப்பாட்டத் போட்டித் தொடரை முதற் தடவையாக இலங்கை வென்றது.



08 அமெரிக்க ஜனாதிப்தி பராக் ஒபாமா இந்தியா விஜயம்.




10 ஆசிய பசுபிக் பொருளாதார மாநாடு ஜப்பானில் ஆரம்பம். அதில் 21 நாடுகள் பங்கேற்றன.







## டிசம்பர்

1 கொலம்பிய நாட்டில் பாரிய மண்சரிவு. 50 பேர் வரை இறப்பு.







4 வட ஐரோப்பா நாடுகளில் பாரிய பனிமூட்டம் காரணமாக விமான போக்குவரத்து உட்பட நாடுகளிள் பாரிய நிர்வாக விடயங்கள் பாதிப்பு.

7 க.பொ.த. (உ/த) பெறுபேறுகள் வெளியாகின. இதில் 4384 மாணவர்கள் 3 பாடங்களிலும் புதர சித்தி பெற்றதுடன் 1,42,381 பேர் பல்கலைக்கழகத்திற்குத் தகுதி பெற்றனர்.

10 நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நோபல் பரிசு வழங்கப்பட்டது.




12 கொஸோவோ நாட்டின் பாராளுமன்ற தேர்தல் ஆரம்பம்.

13 க.பொ.த. (சா/த) பரீட்சை ஆரம்பம். நாடு முழுவதும் 33,804 நிலையங்களில் 5 இலட்சத்தி 8 ஆயிரத்து 416 பரிட்சாத்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றினர்.

13 மியன்மார் ஜனநாயக கட்சி தலைவி யாங் சான் சூகி விடுதலை.



19 உலக சுகாதார தாபனத்தின் மாநாடு உருகுவேயில் நடந்தது. அதில் 172 நாடுகள் பங்கேற்றன. அம்மாநாட்டில் புகையிலை விற்பனை, புகையிலைப் பாவனை, புகையிலை விளம் பரப் படுத்தலைத் தடை செய்வது குறித்து ஆராயப் பட்டது.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்: 17

# அன்றாட வாழ்வில் اللغة العربية அரபு மொழி

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

## வார நாட்கள்

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | يَوْمُ الأَحَدِ |
| திங்கட்கிழமை | يَوْمُ الإِثْنَيْنِ |
| செவ்வாய்க்கிழமை | يَوْمُ الثُّلاَثَاءِ |
| புதன்கிழமை | يَوْمُ الأَرْبِعَاءِ |
| வியாழக்கிழமை | يَوْمُ الْخَمِيْسِ |
| வெள்ளிக்கிழமை | يَوْمُ الْجُمُعَةِ |
| சனிக்கிழமை | يَوْمُ السَّبْتِ |

## இது என்ன? ماهَذا / ماهَذِهِ

ماهَذِهِ؟  كُرَةُ الْقَدَمِ

هَذِهِ كُرَةُ الْقَدَمِ

.........................................

مَاهَذَا؟  (سِكِّيْنٌ)


.........................................

مَاهَذَا؟  (مُشْطٌ)

.........................................

مَاهَذَا؟  (مَرْكَبٌ)

.........................................

ماهَذِهِ؟  (نَظَّارَةٌ)

.........................................

ماهَذِهِ؟  (مِظَلَّةٌ)

.........................................

ماهَذِهِ؟  (دَرَّاجَةٌ)


.........................................

ماهَذِهِ؟  (جَمَلٌ)

.........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

مَاهٰذَا؟  (فِيْلٌ)

..........................................

مَاهٰذَا؟  (أَسَدٌ)


..........................................

مَاهٰذَا؟  قِطٌّ


..........................................

ماهٰذِهِ؟  (خَرِيْطَةٌ)

..........................................

ماهٰذِهِ؟  (رُمْحٌ)

..........................................

ماهٰذِهِ؟  (شَمْسٌ)

..........................................

ماهٰذِهِ؟  (زَرَافَةٌ)


..........................................

# اَلْجِهَةُ

வடக்கு
(அஷ்ஷமால்)
الشَّمَالُ

வடமேற்கு
(அஷ்ஷமால் அல்ஙர்பி)
الشَّمَالُ الْغَرْبِيُّ

الشَّمَالُ الشَّرْقِيُّ
வடகிழக்கு
(அஷ்ஷமால் அஷ்ஷர்க்கி)





மேற்கு
(அல்ஙர்ப்) الْغَرْبُ


الشَّرْقُ கிழக்கு
(அஷ்ஷர்க்)


اَلْجَنُوْبُ الْغَرْبِيُّ
தென் மேற்கு
(அல்ஜனூப் அல்ஙர்பி)


اَلْجَنُوْبُ
தெற்கு
(அல்ஜனூப்)

اَلْجَنُوْبُ الشَّرْقِيُّ
தென் கிழக்கு
(அல்ஜனூப் அஷ்ஷர்கி)


اَلدَّائِرَةُ
தாஇரா


اَلْمُثَلَّثُ
முஸல்லஸ்


اَلْمُرَبَّعُ
முரப்பஃ


اَلْمُسْتَطِيْلُ
முஸ்ததீல் (செவ்வகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## How Much Do You Know?

**Assalamu alaikum dear friends,**

*Do you know*? Salams can be conveyed in any season...



Now,

**It's a new year!**

**And I'm new here...**

## Season's greetings!





**Happy Muharram**




**It's cool!**

**Happy New Year too!**



It's 2011, the year of **Chemistry**...It's not just about acids an alkalis...

2011
C
CHEMISTRY

International Year of
**CHEMISTRY**
**2011**
INTERNATIONAL YEAR OF CHEMISTRY





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## What is your favourite tree?

Chemistry has so many things to teach us...Even about the environment...

Look at the environment. To start with, let's watch the trees.

Trees are fresh, as they are green.

They are in various heights.

**They cool the air and recycle it.**

**They produce food inside the leaves.**

These are famous chemical reactions.


Saving the trees, is a need of the hour.

Trees belong to "Kingdom Plantae". Planet earth is considered as a blessed planet, because it carries trees on its surface. When there are a number of trees together in a big area, we call it a forest.

A boy who lives in UK says,

**"My favourite tree is a Cherry tree that I have in my garden. In the spring it has beautiful pink flowers, and then in the summer it has delicious cherries. We have to be quick, to pick the cherries before the birds eat them! I love my Cherry tree!"**





I feel fresh speaking about trees.

Yes, it's necessary to have a fresh start in this fresh New Year.

My message for you at my first appearance is

*"Love the trees. Don't chop them down without a reason. Or else, they'll disappear."*

## Recap of the last year

Write down a recap of all your important activities during the last year. You can get the help of the calendar, your diary, your time tables, and of course, your friends.

Check for the mistakes you've made and mark them red. Mark your good deeds with green. Draw some pictures and colour them.

Now this will help you to spend this year in a pleasing manner. So let's proceed with this trick. It's a secret between you and me. OK?

WOW! Now we have a recap!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Word of the month

Valuable- Valuable is an adjective.


You use this to describe a thing which is really precious.



*"Trees are valuable",*

or

*"I have a valuable necklace."*



## Education

The word 'education' comes from the Greek word 'educo'. It means 'bringing out the values of man'. When a man is born into this world, he is born with intelligence. But it is only education that brings them out. Education plays an important role in a man's life. We must know what is good and what is bad. Education will help us to discriminate between good and bad. The main aim of education is character building. Education moulds a person to be a better member of society.

**Miss N.F.Ayma**

**Km/Al-Hambra Vidyalaya, Maruthamunai.**

## The rain

The cloud was dark
And the car was at the park
It was cold and I fold the books

When rain drops came
The crops were happy
Children were playing bubbles
Parents ,too, got troubles

Soil was wet
Hole in net
We feel happy
It's meal time.


We make boat
After eating cake
We got fresh
After we brush

**By: Razna Razik**
**Grade 07**
**Fathima Balika Muslim M.M.V**
**Gelioya.**

*I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.*


*So write to me at* | Or | mail me to

HOW MUCH DO YOU KNOW?



A 61/ 5,
Zahira Road ,
Mawanella.

aharamenglish@gmail.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைச் செய்திகள்

## ஒரே குடும்பத்தில் நான்கு பேர் சித்தி கல்லூரி அதிபர் மகிழ்ச்சி தெரிவிப்பு

மூதூர் மத்திய கல்லூரியில் கல்வி கற்று வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு மாணவ மாணவிகள் தொடர்ச்சியாக ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

இவ்வாறு சித்திகளை அடைந்ததால் குடும்பத்துக்கும் கல்லூரிக்கும் பெருமையாக உள்ளதாக அக்கல்லூரி அதிபர் ஏ. நஜிமுத்தீன் குறிப்பிட்டுள்ளார்.

ஹரீஸ்-றிபா தம்பதிகளின் பிள்ளைகளும் மூதூர் மத்திய கல்லூரி மாணவர்களுமான றிகாஸ் அஹமட், பாத்திமா, சுதைஸ் முஹம்மட், சஞ்சிதா பேகம் ஆகியோர்களே இவ்வாறு சித்தியடைந்தவர்களாவர்.

### அ /கல்லஞ்சியாகம அரபா மு.வி



சீ.எல். சிபா பானு (157)
பெற்றோர்: எச்.எம். காசிம் லெப்பை-எஸ்.எல். ஹாபிலா உம்மா



டீ.எம். தாரிக் (147)
பெற்றோர்: எஸ்.எம். தாஜுதீன்-எஸ்.எல். பாத்தும்மா



எச்.எம். ஹுஸ்னி மரிக்கார் (169)
அ / கொல்லன்குட்டிகம மு.வி
பெற்றோர்: வை.எம். ஹபீல் மரிக்கார்-எஸ். குறைசியா உம்மா

### அல்அமீன் மு.வி, நவசனபுர, பொலன்னறுவ



எம். இன்சாப் அஹமட் (148)
பெற்றோர்: எம்.எஸ். அஸ்மி-எம்.எல்.எம். பௌமியா



எல்.எம். இஸ்மத் (145)
பெற்றோர்: ஈ.எல். லபீர்-ஐ.கே. ரம்ஸா



ஏ.எஸ்.எப். ரிஸ்லா (153)
பெற்றோர்:யூ.எல். ஸலாம்-எஸ். சம்சுனா



ஏ.ஆர். இனாமா (161)
பெற்றோர்: ஏ.வி. றியாழ்-ஏ.ஏ. சித்தி சல்மா
அக் / றஹ்மானிய்யா பாடசாலை, ஆலம்குளம், அக்கரைப்பற்று



பாத்திமா இனாஷா (160)
மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி
பெற்றோர்:காலிதீன்-மாஜிதா



எம்.எச். மும்மது ஹாபில் (141)
பெற்றோர்: முஹம்மது ஹாரூன்-புவைசா நோனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெஞ்சமின் ப்ராங்க்ளின்

# வெற்றிக் குணங்கள்!



அவர் அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தை எழுதிக் கையெழுத்திட்ட ஐவரில் ஒருவர், அமெரிக்காவை உருவாக்கியவர்களில் ஒருவர், அர்மோனிகா என்ற ஒரு வகைக் கண்ணாடியைக் கண்டுபிடித்தவர், பென்சில் வேனியா பல்கலைக்கழகம் அமையக் காரணமாய் இருந்தவர், வயலின் மற்றும் கிடார் கலைஞர், சிறந்த செஸ் ஆட்டக்காரர், நிறைய விஷயங்களைப் பற்றி நிறைய எழுதியவர்... இப்படி இன்னும் எத்தனையோ சொல்லிக் கொண்டு போகலாம். வாழ்க்கையில் இத்தனை முத்திரைகள் பதித்த இவர் மிக நல்ல மனிதர் என்றும் பலரால் கருதப்பட்டார். இதை விடப் பெரிய 'வெற்றி வாழ்க்கை' இருக்க முடியுமா?

ஒரு துறையில் வெற்றியடைந்து சாதனையாளராக உலகால் அடையாளம் காணப்படுவது சிறப்பு என்றால், பல தரப்பட்ட துறைகளில் பல சாதனைகள் புரிந்து சரித்திரம் படைக்க முடிவது சிறப்பின் சிகரமே. அப்படிப்பட்ட சிகரங்களின் சரித்திரங்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவு அபூர்வமே. ஏனென்றால், ஒரு துறையில் சாதனை புரியவே ஒருவரின் ஆயுள் போதாதென்று பலரும் எண்ணுகையில், அந்தக் குறுகிய வாழ்க்கையில் பல துறைகளில் சாதனைகள் புரிந்திட ஒருவரால் முடிகிறது என்றால் அது கவனிக்கப்பட வேண்டிய வாழ்க்கை அல்லவா? அது எப்படி சாத்தியமாயிற்று என்றறிய ஆர்வம் காட்டுவது வெற்றியடையத் துடிக்கும் அனைவருக்கும் இயல் பல்லவா?

எழுத்தாளர், விஞ்ஞானி, அரசியல் வல்லுநர், கல்வியியலாளர், பத்திரிகையாளர், இசைக் கலைஞர், தத்துவஞானி, நாட்டின் உயர் பதவிகள் பலவற்றை அலங்கரித்தவர் என்றெல்லாம் ஒரே மனிதரைப் பற்றி சொல்ல முடியும் என்றால் அது பிரமிக்க வைக்கும் செய்தியே. ஏனென்றால் இவற்றில் சில, ஒன்றுக்கு ஒன்று சிறிதும் சம்பந்தப்படாத, அல்லது எதிர்மறையான துறைகளே. அவர் சாதனை புரிந்த துறைகளாக வேறு சிலவற்றின் பெயர்களைக் கூடக் கூறலாம். இத்தனை அடைமொழிகளுக்கும் பொருந்தக் கூடிய ஒருவர் இருந்தார் என்றால் அவர்தா ன் பெஞ்சமின் ப்ராங்க்ளின்.

அவர் அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தை எழுதிக் கையெழுத்திட்ட ஐவரில் ஒருவர், அமெரிக்காவை உருவாக்கியவர்களில் ஒருவர், அர்மோனிகா என்ற ஒருவகைக் கண்ணாடியைக் கண்டுபிடித்தவர், பென்சில்வேனியா பல்கலைக்கழகம் அமையக் காரணமாய் இருந்தவர், வயலின் மற்றும் கிடார் கலைஞர், சிறந்த செஸ் ஆட்டக்காரர், நிறைய விஷயங்களைப் பற்றி நிறைய எழுதியவர்... இப்படி இன்னும் எத்தனையோ சொல்லிக் கொண்டு போகலாம். வாழ்க்கையில் இத்தனை முத்திரைகள் பதித்த இவர் மிக நல்ல மனிதர் என்றும் பலரால் கருதப்பட்டார். இதை விடப் பெரிய 'வெற்றி வாழ்க்கை' இருக்க முடியுமா?

அப்படிப்பட்ட வெற்றி வாழ்க்கை வாழ்ந்த மனிதர், தான் பின்பற்ற வேண்டிய பண்புகளாக பன்னிரண்டு குணங்களை தன் இளமையிலேயே குறித்துக் கொண்டு வாழ முயற்சித்ததாகக் கூறினார். அவை:

1. மிதத் தன்மை

✎ உண்பதிலும் அருந்துவதிலும் மிதத் தன்மை முக்கியம். ஊக்கத்தைக் கெடுக்கும் அளவு உண்ணாதே, மது அருந்தாதே!

2. நாவடக்கம்

✎ பிறருக்கோ, உனக்கோ நலம்புரியும் சொற்களை அன்றி வேறு சொற்களைப் பேசாதே. வெறும் நேரம் போக்கும் பேச்சில் எப்போதும் கலந்து கொள்ளாதே!

3. ஒழுங்குமுறை

✎ உன் பொருள்கள் ஒவ்வொன்றையும் உரிய இடத்தில் வைக்கப் பழகு. உன் தொழிலின் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிக்கும் உரிய ஒரு காலத்தை ஒதுக்கி வை!

4. உறுதியுடைமை

✎ செய்யவேண்டியவற்றைச் செய்ய உறுதிகொள். உறுதி கொண்டவற்றைத் தவறாது செய்!

5. சிக்கனம்

✎ உனக்கோ, பிறருக்கோ நன்மை செய்வதற்காக அல்லாமல் வேறெதற்காகவும் பணத்தை செலவழிக் காதே. அதாவது வீண் செலவு செய்யாதே!

6. முறையான உழைப்பு

✎ காலத்தை சிறிதும் இழக்காதே. எப்போதும் பயனுள்ள எதையாவது செய்து கொண்டிரு. தேவையற்ற செயல்கள் யாவையும் ஒழித்து விடு!

7. வாய்மை

✎ பிறரைப் புண்படுத்தும் சூழ்ச்சி செய்யாதே. இரண்டகமில்லாமலும் நேர்மையுடனும் சிந்தனை செய், பேசும்போதும் அப்படியே பேசு!

8. நேர்மை

✎ தீங்கு செய்து, அதன் மூலம் யாருக்கும் தீமை உண்டாக்காதே. அதுபோல கடமைகளை செய்யாமல் விட்டும் அடுத்தவருக்கு தீங்கு செய்யாதே!

9. நடுநிலையுணர்வு

✎ எதிலும் அதீதத் தன்மையை விலக்கு. உனக்கு இழைத்த தீங்குகளுக்காகக்கூட நீ அடுத்தவரிடம் சினம் கொள்ளாதிரு!

10. துப்புரவு

✎ உடல், உடை, இருக்குமிடம் ஆகியவற்றில் எத்தகைய துப்புரவுக் கேட்டுக்கும் இடம் அளிக்காதே!

11. மன அமைதி

✎ சின்னச் சின்ன விஷயங்களுக்காகவோ, தவிர்க்க முடியாத மற்றும் தற்செயலாய் நிகழும் நிகழ்ச்சிகளுக்காகவோ மன அமைதி இழக்காதே.

12. ஒழுக்கமுடைமை

✎ அயர்வு அல்லது பலவீனம் அடையும் அளவுக்கோ, உன்னுடைய மற்றும் அடுத்தவருடைய அமை திக்கோ, புகழுக்கோ கேடு உண்டாக்கும் அளவுக்கோ இன்பம் நுகராதே!

பெஞ்சமின் ப்ராங்க்ளின் இந்த பண்புகளைத் தன் வாழ்க்கையில் இளமையில் இருந்தே பின்பற்றத்

"நான் எளிய வாழ்க்கையையே முக்கியமாக எடுத்துக் கொண்டேன். ஏனென்றால் நல்லறிவையும் மூளைத் தெளிவையும் தரத் தக்க பண்பு அதுவே. வாழ்க்கையில் இடைவிடாது குறுக்கிடும் மாயக் கவர்ச்சிகளை எதிர்த்து நிற்கவும் பழைய பழக்கங்களின் ஓய்வொழிவில்லாத ஈர்ப்பாற்றலைத் தடுத்து சமாளிக்கவும் தளராத விழிப்புணர்வு தேவை. மூளைத் தெளிவும் அமைதியும் இல்லாவிட்டால் இந்தத் தளரா விழிப்புணர்வு ஏற்படாது."

பெஞ்சமின் ப்ராங்க்ளின்

துவங்கியது தன் வெற்றிகளுக்கும் மன அமைதிக்கும் காரணம் என்று கருதினார். எல்லா நேரங்களிலும் இதைப் பின்பற்றியதில் வெற்றி பெற முடிந்ததில்லை என்பதை ஒப்புக் கொள்ளும் அந்த அறிஞர், ஆனாலும் திரும்பத் திரும்ப இவற்றைத் தன் வாழ்க்கையில் பின்பற்ற முயன்றதாகவும் சிறிது சிறிதாக அதில் வெற்றி பெற முடிந்ததாகவும் கூறுகிறார்.

அவர் வாழ்வில் எளிய வாழ்க்கையே இந்தப் பண்புகளுக்கு அத்திபாரமாக இருந்தது என்றும் சொல்லலாம். தன் சுயசரிதத்தில் ஓரிடத்தில் கூறுகிறார். "நான் எளிய வாழ்க்கையையே முக்கியமாக எடுத்துக் கொண்டேன். ஏனென் றால் நல்லறிவையும் மூளைத் தெளிவையும் தரத்தக்க பண்பு அதுவே. வாழ்க்கையில் இடைவிடாது குறுக்கிடும் மாயக் கவர்ச்சிகளை எதிர்த்து நிற்கவும் பழைய பழக்கங்களின் ஓய்வொழிவில்லாத ஈர்ப்பாற்றலைத் தடுத்து சமாளிக்கவும் தளராத விழிப்புணர்வு தேவை. மூளைத் தெளிவும் அமைதியும் இல்லாவிட்டால் இந்தத் தளரா விழிப்புணர்வு ஏற்படாது."

பல துறைகளில் வெற்றி பெறுவது மட்டுமல்லாமல் தனிப்பட்ட மனநிலையிலும் ஒரு நிறைவை அவர் காண இந்த 12 பண்புகளும் அவருக்கு உதவியிருக்கின் றன. ஏனென்றால், இந்தப் பன்னிரண்டில் எந்த நல்ல பண்பும் விட்டுப் போகவில்லை. ஒரு மாபெரும் வெற்றி யாளர் பின்பற்றி வெற்றி பெற்ற பண்புகளை நாமும் ஏன் பின்பற்றி வெற்றிபெறக் கூடாது?

**நன்றி: நம்பிக்கை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லடியார்களுக்கு அல்லாஹ் வழங்கும் சுவனமும் அதன் இன்பங்களும்

அல்குர்ஆன் இறை அடியார்களுக்கு தயார்படுத்தப்பட்டிருக்கும் சுவன இன்பம் குறித்து மிக அழகாக விபரிக்கின்றது. அவற்றுள் சிலவற்றை சுருக்கமாக அறிந்து கொள்வோம்.

**1. சுவன அருவி**

"அதில் (அவர்கள் குடிப்பதற்கு) ஓடிக் கொண்டிருக்கும் ஊற்று உண்டு."

(ஸுரா அல்காஷியா)

"அவற்றின் கீழ் நீரருவிகள் ஓடிக் கொண்டிருக்கும்."

(ஸுரா அல்மாயிதா: 12, ஸுரா யூனுஸ்: 09)

"இன்னும் சதா நீரருவிகள் ஓடிக் கொண்டிருக்கும் சுவனபதிகளில் நுழைவிப்பேன்."

(ஸுரா ஆல இம்ரான்: 195)

"அவற்றின் கீழ் நீரருவிகள் ஓடிக் கொண்டிருக்கும். அவற்றில் நிலையாக அவர்கள் தங்கிவிடுவர்."

(ஸுரா அந்நிஸா: 13,57,127)
(ஸுரா அத்தௌபா: 100,72)
(ஸுரா அல்மாயிதா: 85,119)
(ஸுரா ஆல இம்ரான்: 136,198,15)

**2. சுவனவாசிகளுக்கென்றே தயாரிக்கப்பட்ட குடிபானங்கள்**

"மேலும் (அதன் பானங்களை அருந்த) குவளைகள் வைக்கப்பட்டிருக்கும்."

(ஸுரா அல்காஷியா: 14)

"தெளிவான (உயர் மது) பானங்கள் நிறைந்த கிண்ணங்களுடனும் கெண்டிகளுடனும் குவளைகளுடனும் மாறா அழகுடைய சுவனத்துச் சிறுவர்கள் (அவர்களிடையே சுற்றிக் கொண்டிருப்பர்."

(ஸுரா அல்வாகிஆ: 18)

**3. உயர்ந்த விரிப்பும் கட்டில்களும்**

"விரிக்கப்பட்ட உயர்ந்த விரிப்புக்கள் அங்கு உள்ளன."

(ஸுரா அல்வாகிஆ: 34)

"ஒருவரை ஒருவர் முன்னோக்கியவர்களாக அவற்றின் மீது சாய்ந்திருப்பர்."

(ஸுரா அல்வாகிஆ: 16)

**4. ஹூருல் ஈன்கள் (கண்ணழகிகள்)**

"இன்னும் (இவர்களுக்கு) 'ஹூருல் ஈன்' (எனும் கண்ணழகிகளான மனைவி) களும் கிடைப்பார்கள்."

(ஸுரா அல்வாகிஆ: 22)

"நிச்சயமாக (ஹூருல் ஈன்களான) அவர்களை சிறப்பாக (இவர்களுக்கென்றே புதிதாக) உண்டாக்கினோம்."

"பின்னர் நாம் அவர்களை கன்னிகளாகவும் ஆக்கி வைத்தோம்."

"(கணவர்கள் மீது) பற்றுக் கொண்டவர்களாகவும் நிகரான வயதுடையவர்களாகவும் ஆக்கினோம்."

(ஸுரா அல்வாகிஆ: 35,37)

"அங்குள்ளவர்களுக்கு தூய்மையான மனைவியரும் உள்ளனர்."

(ஸுரா ஆல இம்ரான்: 15)
(ஸுரதுல் அல்பகரா: 25)

**5. நிழல் தரும் மரங்கள்**

"முள்ளில்லாத இலந்தை மரத்தி(ன் அடியி)லும்"

"மேலிருந்து கீழ் வரை சீப்பு சீப்பாக தொங்கியிருக்கும் வாழை மரத்தி (ன் அடியி) லும்"

"இன்னும் நீண்ட நிழலிலும்"

(ஸுரா அல்வாகிஆ: 28-30)

"இன்னும் ஏராளமான கனிகளுக்கு மத்தியிலும் இருப்பர்." (ஸுரா அல்வாகிஆ: 32)

"இன்னும் அவர்களை அடர்ந்த நிழலிலும் இருக்கச் செய்வோம்." (ஸுரா அந்நிஸா: 57)

"அதன் உணவும் அதன் நிழலும் நிலையானதாகும்."

(ஸுரா அர்ரஃது: 35)

எனவே, நாமும் இவ்வுலகில் சிறந்த அமல்களைச் செய்து சுவனம் புக அல்லாஹ் அருள் புரிவானாக!

எப். நுஹா நிஸார்
தரம்- 10
கிரி/ கெகுணகொல்ல தே.பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸலபுஸ் ஸாலிஹீன்களின் பொன்மொழிகள் சில...

**இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு)**

யார் தான் அல்லாஹ்வை நேசிப்பதாக உணர்கிறாரோ அவர் தன்னை அல்குர்ஆனில் ஈடுபடுத்தட்டும். யார் அல்குர்ஆனோடு தொடர்புள்ளவராக இருக்கிறாரோ அவர் அல்லாஹ்வை நேசம் வைத்தவராவார். உண்மையில் அல்குர்ஆன் அல்லாஹ்வின் வார்த்தையாகும்.

**இப்னு தைமிய்யா (ரஹிமஹுல்லாஹ்)**

அர்ரிழா (திருப்பொருத்தம்) அல்லாஹ்வை சென்றடைவதற்கான மிக மகத்துவமான வாயிலாகவும் உலகத்தின் சுபசோபனமாகவும் இருக்கிறது.

**இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹிமஹுல்லாஹ்)**

மனிதர்கள் தமக்கான உணவு, பானத்தை விடவும் கல்வியின் பால் அதிக தேவையுடையவர்கள். ஏனெனில் ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஓரிரண்டு தடவைகளே உணவு குடிப்புக்காக தேவை உள்ளது. ஆனால் ஒருநாளில் பல தடவைகள் கல்வியின் பால் தேவையுடையவராக அவர் இருக்கிறார்.

**இமாம் ஷாபிஈ (ரஹிமஹுல்லாஹ்)**

எனது ஆசான் இமாம் மாலிக் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களுக்கு முன்னால் கல்வி கற்று கொண்டிருக்கும்போது அவர் மீது கொண்ட மதிப்பச்சத்தின் காரணமாக பாட நூல்களின் பங்கங்களைப் புரட்டும்போது அதனது ஓசை அவரது காதில் விழாதவாறு மிகவும் மெதுவாகப் புரட்டினேன்.

**இமாம் மாலிக் (ரஹிமஹுல்லாஹ்)**

உலகில் கிடைக்கின்ற தலைமைத்துவம், மறுமையில் கிடைக்கின்ற சந்தோஷம் இவை இரண்டும் மிக நீண்ட உழைப்பின் பலனாகவே அன்றி ஒருவருக்கு சுலபமாக கிடைக்காது.

**இமாம் ஷாபிஈ (ரஹிமஹுல்லாஹ்)**

இறைவிசுவாசிகளுக்கு அல்லாஹ்வால் கொடுக்கப்படும் தண்டனை அவர்கள் உலகச் செல்வங்களை அதிகமாகத் தேடுவதில் இருக்கிறது.

**இப்னு ரஜப் (ரஹிமஹுல்லாஹ்)**

தனது பாவத்தின் காரணமாக அல்லாஹ்விடம் பச்சாதப்படுபவர், தஸ்பீஹில் திளைத்திருப்பவரை விடச் சிறந்தவராவார்.

**இமாம் மாலிக் இப்னு தீனார் (ரஹிமஹுல்லாஹ்)**

அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். அது உனக்கு முதலீடற்ற இலாபமாகும்.

**இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹிமஹுல்லாஹ்)**

எப்போது மனிதன் நிம்மதியை உணர்ந்து கொள்வான்? என்று ஒரு மனிதர் வினவியபோது சுவனத்தில் மனிதனது கால்பாதத்தை வைக்கும் போது என இமாம் அவர்கள் விடை பகர்ந்தார்கள்.

**இமாம் ஹஸன் பஸரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்களிடம் உலகப் பற்றற்ற நிலை பற்றிக் கேட்கப்பட்டபோது பின்வருமாறு கூறினார்கள்:**

நான்கு விடயங்களை நான் உணர்ந்து கொண்டேன்.

1. எனது அமல்கள் என்னால் மாத்திரமே நிறைவேற்றப்பட வேண்டும் என அறிந்து கொண்டேன். அதனால் எனது அமல்களில் முழு மூச்சாய் ஈடுபடலானேன்.
2. எனக்கு அளக்கப்பட்ட ரிஸ்க் என்னை எப்போதும் வந்தடையும் என அறிந்து கொண்டேன். அதனால் எனது உள்ளம் அமைதியடைந்தது.
3. அல்லாஹ் என்னை எந்த நேரமும் அவதானித்துக் கொண்டிருக்கிறான் என அறிந்து கொண்டேன். அதனால் பாவங்கள் செய்வதை விட்டும் தவிர்ந்து கொண்டேன்.
4. மரணம் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என நான் அறிந்து கொண்டேன். எனவே எனது ரப்பை சந்திக்கத் தயாரானேன்.

■ நன்றி: அல்முஜ்தமஃ ■

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதம் 10,11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: எஸ்.எம்.ஏ. ஸலாம், மாவனல்லை

**சென்ற இதழ் தொடர்ச்சி...**

**விடை:**




$DF = \frac{1}{2} DC$

$EB = \frac{1}{2} AB$

DC=AB (இணைகரத்தின் எதிர்ப்பக்கம்)

$\therefore DF = EB$


ஆனால் DF // EB (இணைகரத்தின் எதிர்ப்பக்கம்)
$\therefore$ EBFD ஓர் இணைகரம்
(எதிர்ப்பக்கங்கள் சமனும் சமாந்தரமும்)

இனி $\triangle DXC$ இல் DC இன் நடுப்புள்ளி F
DX // FY
$\therefore XY = CY$ (நடுப்புள்ளித் தேற்றத்தின் மறுதலை)

இதேபோல் $\triangle ABY$ இல்
AE = BE
EX // BY
$\therefore AX = XY$
ஆனால் XY = CY (ஏற்கனவே நிறுவப்பட்டது)
$\therefore AX = XY = CY$

**வினா:**

i. உருவை அவதானித்து $\triangle PQR$ இன் சுற்றளவு 5cm எனின் $\triangle ABC$ இன் சுற்றளவைப் பெறுக.




P,Q,R எனும் புள்ளிகள் $\triangle DEF$ இன் பக்கங்களின் நடுப்புள்ளிகளாகும்.

ii. இவ்வாறு உள்அமையும் முக்கோணங்களை $\triangle ABC$, $\triangle DEF$, $\triangle PQR$ என தொடர்ந்து அமைத்தபோது உள்ளே அமையும் முக்கோணமானது nஆவது எனின், அதன் சுற்றளவுக்கும் வெளியே அமையும் பெரிய முக்கோணத்துக்கும் இடையிலான சுற்றளவுரீதியான தொடர்பை எழுதுக. (இங்கு உள்ளே அமையும் மிகச்சிறிய முக்கோணத்தின் சுற்றளவை a நீள அலகுகள் எனக் கருதுக.)

**விடை:**

$\triangle PQR$ இன் பக்கங்கள் $\triangle DEF$ இன் பக்கங்களின் அரைப்பங்காகும். (நடுப்புள்ளித் தேற்றம்)

$\therefore$ $\triangle DEF$ இன் சுற்றளவு $\triangle PQR$ இன் இரண்டு மடங்காகும்.

இதே போல் $\triangle ABC$ இன் சுற்றளவு $\triangle DEF$ இன் சுற்றளவின் இரண்டு மடங்காகும்.

$\therefore$ $\triangle PQR$ இன் சுற்றளவு = 5cm

$\triangle DEF$ இன் சுற்றளவு =10cm

$\triangle ABC$ இன் சுற்றளவு =20cm

$\triangle PQR$ உள்ளே 3ஆவது முக்கோணமாகும். (ஒழுங்கின்படி)

$\therefore$ $\triangle ABC$ (வெளிக்கோணம், பெரியது) இன் சுற்றளவு

$$= 5 \times 2^{3-1}$$
$$= 5 \times 2^2$$
$$= 5 \times 4$$
$$= 20 \text{ cm}$$

ii. ஆகவே, உள்ளமையும் முக்கோணம் n ஆவதாக இருப்பின் அதன் சுற்றளவு a ஆக உள்ள போது, வெளிமுக்கோணம் $ax^{n-1}$ ஆக சுற்றளவு அமையும்.

(வினா: iii)

இவ்வாறு உள்ளமையும் சிறிய முக்கோணம் 5வது ஆகவும் அதன் சுற்றளவு 10cm ஆகவும் உள்ளது எனினும் வெளிமுக்கோணத்தின் சுற்றளவு யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை:**

அதன் சுற்றளவு $a \times 2^{n-1}$ ஆகும்.

இங்கு $a = 10,\ n = 5$

∴ வெளி முக்கோணம் $= 10 \times 2^{5-1}$


$= 10 \times 2^4$

$= 10 \times 16$

$= 160$ cm ஆகும்

**வினா:**

ABCD எனும் நாற்பக்கலின் பக்கங்களின் நடுப்புள்ளிகளை அடுத்தடுத்து இணைக்க வரும் நாற்பக்களின் சுற்றளவு ABCD இன் மூலை விட்டங்களின் கூட்டுத்தொகைக்கு (நீளத்தில்) சமமாகும் எனக்காட்டுக.




$\triangle BCD$ இல் $PQ = \frac{1}{2} BD$ (தேற்றப்படி)

இதேபோல் $\triangle ABD$ இல் $RS = \frac{1}{2} BD$ (தேற்றப் படி)

∴ $PQ + RS = \frac{1}{2} BD + \frac{1}{2} BD$

$= BD$

இதே போல் $PS + QR = AC$ என நிறுவலாம்.

∴ $PQ + RS + PS + QR = BD + AC$

∴ PQRS இன்சுற்றளவு $= BD + AC$

## அதுவும் இதுவும்

ஒரு நாட்டின் சனத்தொகை ஐந்து கோடி. ஒவ்வொரு வருடமும் முன்னைய வருடத்தின் சனத்தொகையின் பத்து வீதம் அதிகரிக்கிறது. பத்து வருட முடிவில் என்ன வாக இருக்கும்?

பதில் : இட நெருக்கடி ஏற்படும்.

:----- ???

5ஆம் பக்க தொடர்...

இத்தகவல்கள் யாவும் எங்கு, எவ்வாறு ஒன்று சேமிக்கப்பட்டு இறுதி வடிவம் கொடுக்கப்படுகின்றன என்பது விஞ்ஞானிகளுக்கே புரியாத புதிராக உள்ளது. மனிதனைப் பற்றி மனிதனால் கூட சரியாக விளங்கி அறிய முடியாதபோது எவ்வாறு தனக்கும் பிறருக்கும் அவனால் வாழ்க்கைக்கான வழிகாட்டுதலை வழங்க முடியும்?

தற்போது அல்லாஹ்வின் படைப்பாற்றலின் மகிமையைச் சற்று அவதானிப்போம்.

உங்கள் கண்களைச் சிமிட்டியவாறே சற்று நேரத்திற்கு அங்குமிங்கும் பார்வையைச் செலுத்துங்கள். உங்கள் பார்வைக்குப்பட்ட காட்சிகள் எவ்வாறு இருந்தன? சீராக இருந்தனவா அல்லது தலைகீழாக இருந்தனவா? அல்லது அக்காட்சிகளைக் கிரகித்துக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டதா? அனைத்தும் சீராகவும் நேர்த்தியாகவும்தான் நடந்திருக்கும். நாம் ஒரு பொருளைப் பார்த்ததும் இதுவரை நாம் கற்ற அனைத்துச் தொழிற்பாடுகளினதும் பின்புதான் அதன் முழுத் தோற்றமும் உங்கள் கண்களுக்குத் தென்படுகின்றது. அப்படியாயின் எவ்வளவு விரைவாக எமது கண்கள் செயற்படுகின்றன என்று சற்று சிந்தியுங்கள். கண்கள் இவ்வனைத்துத் தொழிற்பாடுகளையும் 0.1 வினாடிகளில் செய்து முடிக்கின்றன. உலகில் அறிமுகமாகியுள்ள அதி நவீன Cybershot Digital கமராக்களினால் கூட இவ்வளவு விரைவாகப் படம்பிடிக்க முடியாது.

அல்லாஹ்வின் படைப்பாற்றலின் வல்லமையைப் பார்த்தீர்களா? அவனது படைப்புகளில் காணப்படும் நுட்பமும் நேர்த்தியும் ஒழுங்குகளும் அவை அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று அதன்படி செயற்படுகின்றன என்பதை உணர்த்துகின்றன. அல்லாஹ் கூறுகின்றான்:

"உங்களுக்குச் செவிப்புலனையும் பார்வை களையும் இதயங்களையும் அவனே அமைத்தான். (எனினும்) நீங்கள் மிகக் குறைவாகவே (அவனுக்கு) நன்றி செலுத்துகின்றீர்கள்." (32:09)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமாம் தாபித் இப்னு குர்ரா (ரஹிமஹுல்லாஹ்)

தாபித் இப்னு குர்ரா மர்வான் அல்-சபீ-அல் ஹர்ரானி கி.பி. 836ல் ஹர்ரான் நகரில் (தற்போதைய துருக்கி) பிறந்தார். அவரின் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர் சபீயான் கோத்திரத்தைச் சேர்ந்தவராவார். அவரின் மொழி வல்லமையின் காரணமாக பிரபல கணிதவியலாளரான முஹம்மது இப்னு மூஸா இப்னு ஷாக்கிர் என்பவர் இவர்பால் கவரப்பட்டதோடு இவருக்குள் மறைந்திருக்கும் விஞ்ஞான அறிவையும் இனம் கண்டு இவரை அப்பாஸிய கலீபாவின் மேற்பார்வையில் இயங்கி வந்த விஞ்ஞான குழுவில் சேர்த்துக் கொள்ள சிபாரிசு செய்தார். அங்கு அவர் அக்காலத்தில் பிரபலம் வாய்ந்த பனூ மூஸா சகோதரர்களிடம் கல்வி கற்றார்.

இந்த காலகட்டத்தில் தாபித் விஞ்ஞானத்தின் பல பிரிவுகளுக்கும் தமது பங்களிப்பை வழங்கி சிறப்பித்தார். குறிப்பாக கணித சாஸ்திரம், வான சாஸ்திரம், பொறியியல் போன்றவற்றில் அவர் பங்களிப்புச் செய்ததோடு கிரேக்க மொழியிலிருந்து அரபு மொழிக்கு கணிசமான அளவு மொழி பெயர்ப்புக்களையும் செய்தார். பல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்ற இவர் பக்தாதில் இருக்கும் போதே கி.பி. 901ல் இறையடி சேர்ந்தார்.

தாபித் கணித சாஸ்திரத்திலும் வான சாஸ்திரத்திலும் பிரதான பங்களிப்பை வழங்கிய அதே சமயம், பாரம்பரிய கேத்திர கணித முறையில் கருவிகளின் பிரயோகத்தையும் புகுத்தி கேத்திர கணிதத்தை அட்சர கேத்திர கணிதமாக மாற்றியமைத்தார். அதுமட்டுமல்லாமல் அக்கணித முறை பற்றிய பல புதிய கோட்பாடுகளையும் அறிமுகம் செய்து அத்துறையை விருத்தி செய்தார். இதன் மூலம் பாரம்பரிய கேத்திர கணித முறையிலிருந்து திரிகோண சாஸ்திரத்தை அறிமுகம் செய்து விரிவுபடுத்தினார்.

இவர் யூக்விட்டின் மூலகங்கள் பலவற்றின் சூத்திரங்களை விமர்சித்ததோடு அதில் முக்கிய மாற்றங்களையும் செய்தார். இவர் கணிதத்துவ கூறுகளை அட்சர கணித பரிமாணங்களைப் பிரயோகித்து வட்டம் மற்றும் முட்டை (Oval) வடிவம் போன்ற பிரிவுகளைக் கற்றுத் தேர்ந்தார். இவர் வெவ்வேறான தொகுதிகளதும் அமைவுகளதும் வெளிப்பரப்பையும் கணபரிமாற்றத்தையும் கணித்து நிச்சயிக்கக்கூடிய விதிகள் பலவற்றைத் தோற்றுவித்தார். புவியியலில் தொலமியின் கூற்றுக்களை திருத்திக் கூறியவர்களுள் இவரும் ஒருவராவார். சூரியனதும் சந்திரனதும் அசைவுகள் பற்றி ஆராய்ந்து நேரக்கணிப்பு பற்றிய ஆய்வு நூலையும் எழுதினார்.

பொறியியலிலும் மனோதத்துவத்திலும் பௌதிகவியலிலும் இவர் நிலையான ஸ்தாபகராகக் கருதப்படுகிறார். இவர் இத்துறையில் உடற்கூறு, ஒலிக்கிரணம் மற்றும் நெம்புகோல்களின் தன்மை, செயற்பாடு போன்றவற்றை ஆராய்ந்தார். அவற்றுக்கு மேலாக பல நூல்களை மொழி பெயர்த்ததோடு மொழி பெயர்ப்புக் கலைக்கென தனியானதொரு கல்லூரியையும் தோற்றுவித்து அதில் நூற்றுக்கணக்கான நூல்கள் கிரேக்க மொழியிலிருந்து அரபு மொழிக்கு மொழிமாற்றம் செய்யப்படுவதையும் மேற்பார்வை செய்தார்.

தாபித் எழுதிய ஆக்கங்களுள் கணிசமான அளவு பாதுகாத்து வைக்கப்பட்டன. அவற்றுள் அநேகமான நூல்கள் கேத்திர கணிதம் சம்பந்தமானவையாக இருந்த அதேநேரம், வான சாஸ்திரம், மருத்துவம் ஆகியவை சம்பந்தமான நூல்களும் இருந்தன. இவையனைத்தும் அரபு மொழியில் எழுதப்பட்டிருந்தன. சில நூல்கள் சிரிய மொழியில் காணப்பட்டன.

மத்திய காலத்தில் அவரது சில நூல்கள் கிரிமோனாவின் ஜெராட் அவர்களால் லத்தீன் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டன. அண்மைக் காலமாக அவரது நூல்கள் ஐரோப்பிய மொழி மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டன. இவரது சொந்த ஆக்கங்களும் மொழிபெயர்ப்பு நூல்களும் 9ம் நூற்றாண்டளவில் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு ஆக்கபூர்வமான இன்றியமையாத தேவைகளாகக் கருதப்பட்டன.

**சுல்பி முகம்மது கான்**
**புடவைகட்டு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

## தரம் -10

1. வரலாறு என்பதற்கான வரைவிலக்கணங் களைத் தருக. (3 புள்ளிகள்)
2. வரலாற்று மூலாதாரங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம். (4 புள்ளிகள்)
3. அவற்றை விளக்குக. (5 புள்ளிகள்)
4. வரலாறு கற்பதால் ஏற்படும் பயன்கள் மூன்றை விளக்குக. (6 புள்ளிகள்)

**விடை**

1. அ) "புராதன காலம் தொடக்கம் இன்றைய காலம் வரையிலான மனித குலத்தின் கடந்த காலத்தைக் கற்பதுதான் வரலாறு."
- ஸ்டுவர்ட் பீகொட்

ஆ) "வரலாறு என்பது ஒரு யுகத்தில் எழுதிப் பாதுகாத்து வைக்குமளவுக்குப் பெறும திமிக்க விடயங்களை அதற்கு முன்னைய யுகமொன்றிலிருந்து தேடிக் கண்டுபிடித்துக் கொள்வதாகும்." - பேர்க் ஹாட்

2. அ)கல்வெட்டுக்கள்

ஆ)நாணயங்கள்

இ)தொல் பொருட்கள்

ஈ) இலக்கியங்கள் என 4 வகைப்படுத்தலாம்.

3. அ) கல்வெட்டுக்கள்-

கல்வெட்டுக்கள் குகை, தூண், கற்பலகை, குன்றுக் கல்வெட்டுக்கள் என்று பல்வகைப்படும்.

குகைக் கல்வெட்டுக்கள் கற்குகைகளில் கற்பீலிக்கு சற்றுக் கீழே காணப்படும்.

தூண் கல்வெட்டு புனித தலத்திற்கு எதிரில் காணப்படும்.

தட்டையான கல்லில் பொறிப்பது கற்பலகைக் கல்வெட்டாகும்.

குளத்திற்கு அருகிலுள்ள குன்றில் பொறிக் கப்படுவது குன்றுக் கல்வெட்டாகும்.

ஆ) நாணயங்கள் -

இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட நாணயங்களும் பல வரலாற்றுச் செய்திகளை எமக்குத் தருகின்றன. உதாரணமாக இலங்கையில் உரோம நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந் நாணயங்கள் இலங்கைக்கும் உரோமுக்குமுள்ள தொடர்புகளை எமக்குத் தெரிவிக்கின்றன. மேலும் இலங்கையில் எப்பிரதேசங்களில் வர்த்தக நடவடிக்கைகள் நடந்தன என்பதையும் இந்நாணயங்கள் தெரிவிக்கின்றன.

இ) தொல்பொருட்கள்-

எமது முன்னோர் கட்டிய கட்டடங்களும் அகழ்வின்போது பெறப்படும் பொருட்களும் இந்த வகையினுள் அடங்கும். தொல்பொருள் அகழ்வின் போது பெறப்படும் உபகரணங்கள், ஆயுதங்கள், மட்பாண்டங்கள், செதுக்கல்கள் முதலியன தொல்பொருள் சான்றுகளாகும்.

ஈ) இலக்கிய மூலாதாரங்கள் -

இவ்வகையில் இலக்கிய நூல்கள், நாட்டார் கதைகள், வம்சக் கதைகள் முதலியன இடம் பெறும் மகாவம்சம், தீபவம்சம், சூளவம்சம் முதலியன இலங்கையின் முக்கிய மூலாதாரங்களாக உள்ளன. இவற்றிலுள்ள வரலாற்று விடயங்களை தொல்பொருள் சான்றுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்த பின்னே இவற்றின் உண்மைத் தன்மையை நாம் அறிய முடியும்.

4. அ) ஆளுமைமிக்க தலைவர்கள் எமக்கு வழிகாட்டிகளாக அமைவர்.

வரலாற்றுப் பக்கங்களை நாம் புரட்டிப்பார்க்கும்போது அங்கே ஆற்றலும் ஆளுமையும் உள்ள பலரை நாம் காணமுடியும். அவர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவைகள், எமக்கு நல்ல வழிகாட்டிகளாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக மகா பராக்கிரமபாகு விவசாயத்திற்கு ஆற்றிய சேவைகள் இன்றைய ஆட்சியாளர்களுக்கு சிறந்த முன்மாதிரிகளாக அமைகின்றன. அவன் பஸ்துன்கோறளையில் இருந்த சதுப்பு நிலத்தை விவசாயத்துக்குப் பொருத்தமான நல்ல நிலமாக மாற்றினான். அதேபோல இன்றைய ஆட்சியாளர்களும் உவர் நிலங்களை விவசாயத்திற்குப் பொருத்தமான நல் நிலங்களாக மாற்ற முடியும். எனவே, வரலாறு இன்றைய மனிதர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அமைகின்றது.

ஆ) தேசிய ஒற்றுமையைக் காக்க உதவும்.

எமது முன்னோர்கள் இன, மத வேறுபாடுகளை மறந்து செயற்பட்டார்கள் என்பதனை வரலாறு எமக்குப் போதிக்கின்றது. எல்லாளன் சகல மதத்தவர்களுக்கும் சமமான நீதியை வழங்கினான். அவனது படைத் தளபதிகளாக சிங்களவர்களும் இருந்துள்ளனர். இன்றைய அரசியல்வாதிகளுக்கு எல்லாளன் காலத்தில் நிகழ்ந்தவை சிறந்த முன்மாதிரிகளாக அமைகின்றன. பல்லின மக்கள் வாழும் நாட்டிலே ஆட்சியாளர்கள் எந்த மொழிக்கும் எந்த மதத்திற்கும் பாரபட்சம் காட்டக் கூடாது. இன்றைய ஆட்சியாளர்களின் இதயங்களில் இருந்து இனவாதம் அகலவும் தேசியவாதம் அதிகரிக்கவும் எல்லாளன் என்ற வரலாற்றுப் பாத்திரம் உதவுகின்றது.

இ) சூழல் மீது நேசத்தை ஏற்படுத்த வரலாறு உதவும்.

எமது முன்னோர் சூழலைப் பாதுகாக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அவர்கள் இயற்கையை பாதிக்காத வகையிலேயே தமது தேவைகளை நிறைவேற்றினர். இயற்கையாக அமைந்த 2 எச்சக் குன்றுகளின் சுவடுகளை இணைத்து அவர்கள் குளக்கட்டைக் கட்டினார்கள். குளத்திலிருந்து நீரைக் கொண்டு செல்ல தரையின் மென்சாய்வைப் பயன்படுத்தினார்கள். தாதுசேனன் கலாவாவியிலிருந்து நீரைக் கொண்டு செல்ல நிலத்தின் மென்சாய்வைப் பயன்படுத்தினான். நீரைக் கொண்டு செல்ல அவன் அமைத்த கால்வாயே ஜல கங்கையாகும். அதன் சாய்வு 1 மீற்றருக்கு 95 மி.மீ அளவில் அமைந்திருந்தது. இவ்வாறான வரலாற்று நிகழ்வுகள் சூழலை நேசிக்கும் பண்பை இன்றைய மனிதரிடத்திலும் வளர்க்கும்.

## 11ம் தரம்

1. இலங்கையின் வரலாற்றில் 1796, 1802, 1815 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற முக்கிய சம்பவங்களை அதே ஒழுங்கில் தருக. (3 புள்ளிகள்)
2. இலங்கையைக் கைப்பற்ற ஆங்கிலேயர் விரும்பியமைக்கான 4 காரணிகளைத் தருக. (4 புள்ளிகள்)
3. கியூ கடிதத்தை விளக்குக. (5 புள்ளிகள்)
4. ஆளுநர் நோத்தின் படையெடுப்பு தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டை விளக்குக. (6 புள்ளிகள்)

### விடை

1. 1796- பிரித்தானியர் இலங்கையின் கரையோரத்தைக் கைப்பற்றுதல்.

   1802- இலங்கை பிரித்தானியாவின் முடிக்குரிய நாடாக ஆகியமை.

   1815- பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றியமை.

2. அ) இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் இருந்தமை.

   ஆ) இயற்கைத் துறைமுகங்கள் காணப்பட்டமை.

   உ-ம்: திருகோணமலைத் துறைமுகம்

   இ) வர்த்தகத்தின் மூலம் அதிக வருமானத்தைப் பெறுதல்.

   ஈ) கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புதல்.

### 3. கியூ கடிதம்

ஒல்லாந்து மன்னன் ஸ்டெட் ஹோல்டர் (2ம் ஒரேஜ் வில்லியம்) எழுதிய கடிதமே கியூ கடிதமாகும். இது பிரித்தானியாவில் உள்ள கியூ மாளிகையில் வைத்து எழுதப்பட்டதால் கியூ கடிதம் எனப்பட்டது. பிரான்சியப் படைகள் ஒல்லாந்தை ஆக்கிரமிக்க ஒல்லாந்து மன்னன் அருகில் இருந்த நட்பு நாடான பிரித்தானியாவுக்குத் தப்பி ஓடினான். ஒல்லாந்துக்கு இலங்கை போன்ற பல நாடுகள் குடியேற்ற நாடுகளாக இருந்தன. ஒல்லாந்தைக் கைப்பற்றிய பிரான்சியர், ஒல்லாந்துக்கு சொந்தமான குடியேற்ற நாடுகளையும் சொந்தமாக்கி விடுவார்கள் என்று ஒரேஜ் வில்லியம் மன்னன் அஞ்சினான். அதனால் அவன் குடியேற்ற நாடுகளை தனக்கு அடைக்கலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்த பிரித்தானியாவுக்கு வழங்க விரும்பினான். இதற்காக மன்னன் இலங்கையிலிருந்த ஒல்லாந்து ஆளுநர் பன் எங்கன் பெக்கிற்கு ஒரு கடிதம் எழுதினான். ''இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஆங்கிலேயருக்கு ஒப்ப டைக்கவும்'' என்று அதில் மன்னன் குறிப் பிட்டிருந்தான். இக் கடிதமே கியூ கடிதம் ஆகும்.

4. அ) கண்டியின் இயற்கை அரண்கள்

இலங்கையின் முதலாவது ஆங்கில ஆளுநரா கிய நோத் 1803இல் கண்டி மீது படையெடுப்பை மேற்கொண்டார். இப்படையெடுப்பானது தோல்வியைத் தழுவியது. அது தோல்வியை தழுவியமைக்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமானது கண்டியின் இயற்கை அரண்களாகும். கண்டியைச் சுற்றி அடர்ந்த காடு (வன அரண்) காணப்பட்டது. எதிரிகளால் ஊடறுத்து செல்ல முடியாத அடர்ந்த காடாக இது காணப்பட்டது. அக்காட்டை ஊடறுத்துச் செல்லும் மனிதர்கள் வேகமாக ஓடும் நதிகளை யும் கடக்க வேண்டியிருந்தது. அதையும் தாண்டிச் செல்லும் எதிரிகளிடமிருந்து கண்டியை மலைகள் காப்பாற்றின. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கரையோர சமநிலங்களைக் கைப்பற்றினார்களே ஒழிய மலைகள் நிறைந்த கண்டியை அவர்களால் கைப்பற்ற முடியவில்லை.

ஆ) திட்டமிட்டுப் படையெடுக்காமை

திட்டமிடாது, ஆழமாக சிந்திக்காது எடுக்கப் படும் எந்த முயற்சியும் வெற்றி பெறாது என்பதற்கு ஆளுநர் நோத்தின் படையெடுப்பு சிறந்த முன் உதாரணமாக உள்ளது. இலங்கையின் வரலாற் றில் பதியப்பட்டிருக்கும் இப்படையெடுப்பு எமக்கும் நல்ல படிப்பினையாக அமைந்துள்ளது. கண்டியின் புவியியல் அம்சங்களையும் கண்டியின் போர் முறைகளையும் நோத் சிந்திக்கவில்லை. கண்டியில் நிலவும் குளிர், அங்கு பெய்யும் பருவக்காற்று மழை முதலிய முக்கிய அம்சங்களை அவர் கருத்திற் கொள்ளவில்லை. இவர் படையெ டுத்த காலம் பருவ மழை பொழியும் காலமாக இருந்தது. நதிகள் பெருக்கெடுத்து ஓடியதனால் கண்டிக்கும் கொழும்புக்கும் இடையிலான தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. கொழும்பிலி ருந்து வரவேண்டிய மருந்தும் உணவும் வீரர்களும் வராததால் நோத்தின் கண்டிப் படையெடுப்பு தோல்வியில் முடிந்தது.

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

- ஒரு நாளைக்கு நான் எத்தனை தடவைகள் அல்குர்ஆனை ஓதுகின்றேன்?
- எனக்கு அதனை சரளமாக ஓதத் தெரியுமா?
- நான் ஓதுகின்றவற்றில் எத்தனை வீதத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது?
- என் வாழ்வில் அது ஏற்படுத்திய மாற்றங்கள் என்ன?
- அதிலுள்ள ஏவல், விலக்கல்களை கற்பதற்காக எத்தனை நிமிடங்களை தினமும் செலவளிக்கி றேன்?
- நான் அதனை பிறருக்கும் கற்றுக் கொடுக் கின்றேனா?

எத்தனையோ பல உலக விடயங்களுக்காக எமது நேரங்களை செலவிடும் நாம் இறைவ னின் வேதத்தை கற்பதற்கும் கற்றுக் கொடுப்ப தற்கும் அதனோடுடனான உறவினை வளர்ப்ப தற்கும் செலவிடுவதில்லை.

அல்குர்ஆனை கற்பதென்பது அதனை ஓதக் கற்றுக் கொள்வது மாத்திரமல்ல. மாற்றமாக அதன் பொருள், புனிதத் தன்மை, அதன் ஒப்பற்ற தனித்துவம், குறையற்ற வழிகாட் டல்கள் மற்றும் அது எடுத்துரைக்கின்ற விடயங்கள் போன்றவற்றைக் கற்க வேண்டும். சிறுபராயம் முதல் இத்தகைய விடயங்களை கற்பதில் நாம் ஆர்வம் கொண்டோம் என்றிருந்தால் காலக்கிரமத்தில் அல்குர்ஆன் கூறுகின்ற அற்புதங்கள், விஞ்ஞான விளக்கங் கள் தொடர்பில் நாமும் ஆய்வுகளை மேற்கொள் ளலாம்.

இத்தகைய விடயங்களை நாம் கற்று அதனை பிறருக்கும் கற்றுக் கொடுப்பதன் மூலம் நபியவர்கள் கூறிய சிறந்த மனிதர்க ளாக மாற முயற்சிப்போமாக!

உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்து விட்டீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியும் இலக்கியமும்

**10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது**

ஆசிரியர்: நஸ்ரா நிஸாம்தீன்
B.A (Hons) PGDE

*இதோ மாணவர்களே! புதிய பகுதியான ஆகுபெயர் தொடர்பாக கற்கத் தயாராகுங்கள்.*

## ஆகுபெயர்

*01. ஆகு பெயர் எனப்படுவது யாது?*

- ஒரு பொருளின் இயற்பெயர், அப்பொருளோடு சம்பந்தமுடைய பிறிதொரு பொருளுக்கு தொன்று தொட்டு வழங்குவது 'ஆகு பெயர்' என அழைக்கப்படும்.

*02. ஆகுபெயர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?*

- *16 வகைப்படும். அவை:*

**ஆகுபெயர்**

1. பொருளாகு பெயர்
2. இடவாகு பெயர்
3. காலவாகு பெயர்
4. சினையாகு பெயர்
5. குணவாகு பெயர்
6. தொழிலாகு பெயர்
7. எண்ணலளவையாகு பெயர்
8. எடுத்தலளவையாகு பெயர்
9. முகத்தலளவையாகு பெயர்
10. நீட்டலளவை ஆகு பெயர்
11. சொல்லாகு பெயர்
12. தானியாகு பெயர்
13. கருவியாகு பெயர்
14. காரியவாகு பெயர்
15. கருத்தாவாகு பெயர்
16. உவமையாகு பெயர்

*03. இயற்பெயருக்கும் ஆகுபெயருக்குமிடையே காணத்தகு வித்தியாசங்கள் யாவை?*

- வாக்கியங்களில் நேர்ப் பொருளைத் தருவது- இயற்பெயர்

  (எ-டு) காஞ்சிபுரம் பட்டுச்சேலைக்குப் பிரசித்தமானது.

- அஃதே, வாக்கியங்களில், சொல்லுடன் தொடர்புடைய வேறொரு பொருளைக் குறித்தல். குறிப்புப் பொருளையுணர்த்தி இன்னொரு பொருளுக்கு ஆகிவருதல்- ஆகுபெயர்

  (எ-டு) கல்யாணப் பெண் காஞ்சிபுரம் அணிந்து வந்தாள்.

  இங்கே, காஞ்சிபுரம் என்ற இடத்தின் பெயர் அங்கு நெய்யப்பட்ட புடவைக்கு 'ஆகி' வந்திருப்பதைக் கூறலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. ஆகுபெயரின் வகைகளுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

| எடுத்துக்காட்டு | ஆகு பெயர் வகை | விளக்கம் |
|---|---|---|
| மல்லிகை சூடினாள் | பொருளாகு பெயர் | மல்லிகை-முதற்பொருள் உறுப்பாகிய பூவைக் குறிப்பதால் |
| ஊர் அடங்கியது | இடவாகு பெயர் | ஊர்-இடம் மக்களைக் குறிப்பதால் |
| கார்த்திகை பூத்தது | காலவாகு பெயர் | கார்த்திகை-காலம் பூவைக் குறிப்பதால் |
| வெற்றிலை நட்டான் | சினையாகு பெயர் | வெற்றிலை-சினை கொடியைக் குறிப்பதால் |
| நீலம் சூடினாள் | குணவாகு பெயர் | நீலம்-பண்பு/குணம் குவளை மலரைக் குறிப்பதால் |
| பொரியல் உண்டான் | தொழிலாகு பெயர் | பொரியல்-தொழில் பொரித்த உணவைக் குறிப்பதால் |
| கன்னத்தில் இரண்டு கொடு | எண்ணலளவையாகு பெயர் | இரண்டு-எண்ணுப் பெயர் அடியை (தாக்குதலை)க் குறிப்பதால் |
| ஒரு கிலோ தாருங்கள் | எடுத்தலளவையாகு பெயர் | கிலோ-எடுத்தல் அளவைக்கொண்ட பொருளைக் குறிப்பதால் |
| சோற்றுக்கு ஒரு கொத்து போதும் | முகத்தலளவையாகு பெயர் | கொத்து-மதிப்பீடு முகத்தளவை தானியத்தைத் குறிப்பதால் |
| ஒரு மீற்றரிதற்குப் போதும் | நீட்டலளவையாகு பெயர் | மீற்றர்-நீட்டலளவை அளவை உடைய பொருளைக் குறித்தல் |
| இந்நூலுக்கு உரை செய்தான் | சொல்லாகு பெயர் | உரை-சொல்லின் பெயர் பொருளுக்கு ஆகிவருதல் |
| விளக்கு முறிந்தது | தானியாகு பெயர் | விளக்கு- தானியம் தண்டிற்கு ஆகிவருதல் |
| அல்குர்ஆன் ஓது | கருவியாகு பெயர் | அல்குர்ஆன்-கருவிப் பெயர் காரியமாகிய நூலுக்கு ஆகிவருதல் |
| அலங்காரம் கற்றான் | காரியவாகு பெயர் | அலங்காரம்-காரியம் கருவியாகிய நூலுக்கு ஆகிவருதல் |
| கம்பர் படித்தான் | கருத்தாவாகு பெயர் | கம்பர்-கருத்தா அவரால் இயற்றப்பட்ட நூலுக்கு ஆகுதல் |
| காளை வந்தான் | உவமையாகு பெயர் | காளை-உவமை உவமை கொண்ட ஆடவனுக்கு ஆதலால் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.




# உண்மையான வெற்றி எது?

ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)

ஒவ்வொரு மனிதனும் தம் வாழ்வில் வெற்றி பெறவேண்டும் என்றே நினைக்கிறான். சிறு பிள்ளைகளாயினும் சரி பெரியவர்களாயினும் சரி இந்த எண்ணமும் எதிர்பார்ப்பும் இருக்கவே செய்கின்றது. கால வேகத்தோடு சுழலும் மனிதர்களுடைய வெற்றியை (Success) பாடசாலை, கல்லூரி மற்றும் தொழிநுட்பக் கற்கைகள் என்பவற்றில் பெறும் புள்ளிகள், சான்றிதழ்கள் என்பவற்றை வைத்து அளவிட முடியாது.

உண்மையில் இக்கற்கை நெறிகளில் ஒருவர் பெறும் உயர் அடைவுகளை மாத்திரம் வைத்துக் கொண்டு அவர் வெற்றி பெற்றுவிட்டார் என்று கூறிவிட முடியாது. நாளாந்த வாழ்க்கையில் தாம் எதிர்கொள்ளும் சவால்களை முறியடிக்க, முடிவுக்குக் கொண்டுவர செயன்முறை அறிவும் (Practical Knowledge) வேறு பல திறன்களும் தேவைப்படுகின்றன. இத்தகைய சவால்கள் வாழ்க்கையின் பல்வேறு இடங்களில் வித்தியாசமான வடிவங்களில் வரமுடியும்.

வெற்றி (Success) என்பது ஒவ்வொருவருடைய ஏக்கமாகவும் அவாவாகவும் இருப்பினும் அதற்கான விளக்கம், வரைவிலக்கணம் என்பன ஒவ்வொருவரிடத்திலும் வித்தியாசமாகவும் வேறுபட்டும் காணப்படுகின்றன.

இளம் பருவத்தினர் வெற்றி என்பதை வித்தியாசமான விளக்கங்கள் கொடுத்தே நோக்குகின்றனர். மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்குவது அல்லது உயர்ரக கையடக்கத் தொலைபேசி ஒன்றைப் பயன்படுத்துவது அல்லது மடிக்கணனி ஒன்றை வாங்குவது என்பனவே தாம் வாழ்வில் அடைந்த வெற்றியாகக் கருதி அரட்டை அடிக்கின்றனர். அவர்கள் வெற்றி என்பதை அற்பமாகவே கருதிவிட்டனர்.

வளர்ந்தவர்கள் மத்தியில் வெற்றி என்பதற்கான விளக்கமும் வரைவிலக்கணமும் மேலே குறிப்பிட்டதை விட சற்று வித்தியாசமாக அமைந்திருப்பதைக் காணமுடியும். சிலர் கார், பங்களா, தோட்டம், துரவு, காணி, வயல் என சடப்பொருட்களை உடமையாக்கிக் கொள்வது தான் வெற்றி எனக் கொள்கின்றனர். ஏன் இதைத் தான் தமது வாழ்க்கையின் பிரதான குறிக்கோளாகவும் ஆக்கிக் கொள்கின்றனர். மற்றும் சிலர் தாங்கள் எது செய்தாலும் செய்யாமலிருந்தாலும் சுயதிருப்தியும் மகிழ்ச்சியும் இருந்தால் அதுவே வெற்றி என வரைவிலக்கணம் சொல்கின்றனர்.

இன்னும் சிலர் வெற்றி என்பது ஓர் ஏணி; அதன் முதற்படியில் எட்டு வைத்து பின் படிப் படியாக தமது இலக்கை நோக்கி நகர்ந்து செல்வதுதான் வெற்றி எனக் கூறுகின்றனர். ஓர் இலக்கைத் தீர்மானித்து அதை அடைதல், பின் மற்றுமொரு புதிய இலக்கைத் திட்டமிடுதல் இதுதான் உண்மையான வெற்றி என்று இவர்கள் கருதுகின்றனர்.

'வெற்றி' குறித்து பலரிடம் வினவப்பட்ட போது அவர்களது பதில்கள் பின்வருமாறு அமைந்தன:

1. அதிகமாகப் பணம் சம்பாதிப்பது.
2. ஒருவர் தான் வகுத்துக் கொண்ட இலக்கை அடைவது.
3. தனது தேவைகளைப் பூரணப்படுத்திக் கொள்வது.
4. ஒருவர் தான் மனதில் நினைத்ததை நிறைவேற்றுவது. வேறு வார்த்தையில் குறிப்பிட்டால் செய்யத் திட்டமிட்ட ஒரு விடயத்தை செய்து முடிப்பது.
5. பிறரைப் பொறாமைப்பட வைப்பதே வெற்றியாகும் என்பது சிலரது பதிலாக அமைந்தது. (சுவாரஷ்யமான பதில்)

இவ்வாறு வெற்றி என்பதற்குக் கூறப்படும் விளக்கம் அல்லது வரைவிலக்கணங்கள் ஒருவருக்கொருவர் வேறுபடலாம். இருப்பினும் தன்னுடைய வாழ்க்கையில் வெற்றி என்பது இது தான் என ஒருவர் சுயவிளக்கம் ஒன்றைப் பெற்றிருப்பது முக்கியமான விடயமாகும். உங்களுடைய வாழ்க்கையில் வெற்றி எது என்பது தொடர்பான ஒரு தெளிவான விளக்கம் இல்லாவிடின் அந்த வெற்றியை அடைவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் பகற்கனவாக மாறிவிடும். தெளிவான விளக்கம் இருந்தால் மட்டுமே அதை அடைவதற்கான பாதையைத் தீர்மானித்துத் திட்டமிட்டுக் கொள்ள முடியும். இன்றேல் வெற்றி என்பது வெறும் சொல்லாகவோ, கற்பனையாகவோ மாறிவிடும்.

நீங்கள் கொடுக்கும் விளக்கம் அல்லது வரைவிலக்கணம் எதுவாக இருப்பினும் அந்த விளக்கம் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும். அதாவது நீங்கள் கச்சிதமாகத் தயாரித்த ஒரு திட்டத்தை அல்லது ஓர் இலக்கை அடையும்போது மானசீக ரீதியாக உத்வேகமும் ஆரோக்கியமும் உடையவராக நீங்கள் இருக்க வேண்டும்.

உங்களுடைய இலக்கை அடைகிறீர்கள். ஆனாலும் குறிப்பிட்ட அந்த அடைவு மகிழ்ச்சியை ஏற்படுத்தவில்லை என்றால் அந்த வெற்றியில் எந்தப் பயனும் இல்லை. அது போலவே நீங்கள் உங்களுடைய இலக்கை அடைகிறீர்கள், அதன் மூலம் மகிழ்ச்சியையும் உணர்கிறீர்கள். ஆனால் அதை அனுபவிக்கும் நிலையில் நீங்கள் இல்லை. அந்நிலையில் குறித்த வெற்றியை பூரணமானது என்று கூற முடியாது.

எனவே, வெற்றி என்பது நீங்கள் ஓர் இலக்கை அடையும்போது மானசீகமாக மகிழ்ச்சியை உணரக்கூடியவராகவும் அதை அனுபவிக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும். இதுவே வெற்றி என்பதற்குச் சொல்லப்படும் பொது விளக்கமாகும்.

ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரையில் வெற்றி என்பது அவன் உலகில் ஓர் இலக்கை அடையும்போது அல்லாஹ்வின் திருப்தியையும் மறுமையில் அவனுடைய நிலையான, விலை மதிப்பற்ற உயர்ந்த பரிசான சுவர்க்கத்தையும் பெறுவதற்கு வழிவகுக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும். அதுவே இஸ்லாம் கூறுகின்ற உண்மையான வெற்றியாகும். அல்லாஹ் தனது திருமறையில் வெற்றியைப் பற்றி பின்வருமாறு கூறுகிறான்: "ஆகவே. (அந்நாளில்) எவர் (நரக) நெருப்பை விட்டும் தூரமாக்கப்பட்டு, சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்யப்படுகிறாரோ அவர் திட்டமாக வெற்றியடைந்து விட்டார். மேலும் இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றக்கூடிய (அற்ப) இன்பத்தைத் தவிர வேறில்லை."

(ஆலுஇம்ரான் : 185)

இத்தகைய வெற்றியின் பாதையைத் திறந்து கொள்வதற்கான 5 திறவுகோல்கள் காணப்படுகின்றன.

1. ஈமான் (நம்பிக்கை) கொள்ளல். (Faith in Almighty Allah and his Messenger P.B.U.H)
2. ஈமானுக்கு (நம்பிக்கைக்கு)ப் பொருத்தமான அமைப்பில் இலக்குகளைத் தீர்மானித்தல். (Goal setting)
3. இலக்கிலும் அதற்குப் பொருத்தமான செயற்பாடுகளிலும் கவனம் செலுத்துதல். (Concentration in your work)
4. சுய நம்பிக்கை அல்லது தன்னம்பிக்கை. (Confidence with yourself)
5. கடின உழைப்பு. (Hard work to achieve your goal)

இஸ்லாம் கூறும் வெற்றியின் முதல் அம்சம் இறைதிருப்தி என்றவகையில் அத்தகைய இரட்சகனை, வெற்றியையும் தோல்வியையும் தான் நாடியவர்களுக்குத் தரக்கூடிய ஏக நாயன் அல்லாஹ்வை ஈமான் கொள்வது தலையாய அம்சமாகும். தவிரவும் இறை திருப்தியை அடைந்து கொள்ள வேண்டுமானால் நாம் வகுக்கும் இலக்கு நாம் நம்பிக்கை வைத்துள்ள அல்லாஹ்வும் அந்த அல்லாஹ்வை எங்களுக்கு அறிமுகம் செய்த உத்தமத் தூதர் முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் இட்ட கட்டளைகள், வழிகாட்டல்களுக்கமைவாக இருக்க வேண்டும். பின்னர் நாம் வகுத்த இலக்கை அடைந்து கொள்வதற்கான பொருத்தமான செயற்பாடுகளில் கவனம் செலுத்தி அவற்றை நன்றாகத் திட்டமிட்டு கடினமாக உழைத்தால் ஒரு முஃமினின் வெற்றியை அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த சக்தியாலும் தடுக்க முடியாது.

பட்டாம்பூச்சி உடுத்திய பலவர்ண ஆடைகள் போல் எண்ணங்களில் பல வண்ணங்கள் கொண்ட பள்ளிச் செல்வங்களே!

மலர்ச் செடியில் புதிதாக வெளிவரும் இளம் தளிர்களே!

அணை உடைத்து பள்ளம் நோக்கி வீறுநடை போடும் ஆற்றின் வேகம் கொண்ட வாலிபச் சோலைகளே!

வெற்றியின் சிகரம் தொட சித்தம் கொண்ட மாணாக்கரே!

வெற்றி என்பதற்கான வரைவிலக்கணத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். வாலிபத்தின் வளமான நிமிடங்களை ஆதாரமற்ற நம்பிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளில் தொலைத்து விடாமல் உண்மையான வெற்றியைத் தட்டிக்கொள்ள முதலீடு செய்யுங்கள். நிச்சயம் பயன் கிடைக்கும். இன்ஷா அல்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானம்

**10, 11**
தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: ஹாஜிமா ஜெஸீமா ஆதம் லெவ்வை (Bsc, C.P.O retired)
தேசிய கல்வி நிறுவகம்

## தாவர இனப்பெருக்கம்

*(01)* தாவரங்களின் நிலவுகைக்கு இனப் பெருக்கம் அவசியமாகும்.

*1)* தாவரங்களின் நிலவுகைக்கான பதியமுறை இனப்பெருக்க வகைகள் இரண்டை எழுதுங்கள்.

i. ............................ ii. ............................

*2)* பின்வரும் தாவரங்களில் இலகுவாக இனப்பெருக்கமடைகின்ற பாகத்தை எழுதுங்கள்.

அ. சதைக்கரைச்சான் ........................................

ஆ. கறிவேப்பிலை ........................................

இ. வல்லாரை ........................................

ஈ. இஞ்சி ........................................

உ. உருளைக்கிழங்கு ........................................

ஊ. வெங்காயம் ........................................

*3)* மேற்கூறிய வகையான இனப்பெருக்கத் தால் கிடைக்கும் 2 அனுகூலங்கள் யாவை?

i. ........................................................................

ii. ........................................................................

*4)* பதிவைத்தல் என்றால் என்ன? உதாரணம் ஒன்று எழுதுங்கள்.

........................................................................

........................................................................

*5)* ஒட்டு முறைகள் 2இனை எழுதுங்கள்.

i. ........................................................................

ii. ........................................................................

*(02)*

*1)* ஒட்டுதல் மூலமாகக் கிடைக்கும் அனு கூலங்கள் 3இனை எழுதுங்கள்.

i ........................................................................

ii ........................................................................

iii ........................................................................

*2)* இழைய வளர்ப்பை மேற்கொள்ளத் தேவை யான நிலைமைகள் 4இனை எழுதுங்கள்.

i ........................................................................

ii ........................................................................

iii ........................................................................

iii ........................................................................

*3)* இழைய வளர்ப்பில் பின்பற்றுகின்ற படி முறையை ஒழுங்கு முறையில் எழுதுங்கள்.

### கட்டுரை வினாக்கள்

*1)* ஒரு புளிப்பான மாமரத்திலிருந்து விரும்பிய சுவை கொண்ட மாம்பழத்தைப் பெற என்ன செய்வீர்கள் என்பதை வரிசைப் படுத்துங்கள்.

*2)* தாவர பதிய முறை இனப்பெருக்க முறை களை ஒப்பிட்டு நன்மை, தீமைகளை எழுதுங்கள்.

*3)* தகாத காலத்தைக் கழிப்பதற்காகத் தாவ ரங்கள் கொண்டுள்ள இசைவாக்கங்களை உதாரணங்களுடன் விளக்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைகள்

01)

1) இயற்கை, செயற்கையான பதியமுறை இனப்பெருக்கம்

2) சதைக்கரைச்சான் - இலை

கறிவேப்பிலை - வேர்

வல்லாரை - ஓடி

இஞ்சி - நிலக்கீழ்த் தண்டு

உருளைக்கிழங்கு - முகிழ்

வெங்காயம் - குமிழ்

3) i. தாய்த் தாவரத்தை ஒத்த மகட் தாவரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ii. வித்துக்களற்றதாவரங்களைப்பெருக்கலாம்.

iii. விரைவாக விளைச்சலைப் பெறலாம்.

4) தாய்த் தாவரத்துடன் தொடர்பான நிலையில் கிளையில் சிறு வெட்டு இடுவதால் வேர்கள் உருவாக்கத்தைத் தூண்டி புதுத் தாவரத்தைப் பெறுவது.

5) ஒட்டு - அரும்பொட்டு , கிளையொட்டு

(02)

1)

i. ஒட்டுமுறைக்கேற்ற மகட் தாவரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ii. உறுதியான வேர்த்தொகுதி கிடைக்கும்.

iii. நோய் எதிர்ப்புத் தன்மையுள்ள தாவரத்தைப் பெறல்.

2) நிலைமைகள்: -

i. தகுந்த போசணை ஊடகம்

ii. சிறப்பு வெப்பநிலை

iii. தேவையான ஒளி

iv. கிருமி நீக்கப்பட்ட நிலையைப் பேணுதல்.

v. போசணை ஊடகத்தில் நுண்ணங்கி வளர்ச்சியைத் தடுத்தல்.

3. இழைய வளர்ப்பு: -

i. கிருமி அழித்த நுண்ணிய தாவரப் பாகத்தைத் தெரிந்தெடுத்தல்.

ii. வளர்ப்பூடகத்தில் இடுதல்.

iii. கலப்பிலியால், கலத்திணிவு உருவாக்கப் படும்.

iv. பொருத்தமான வளர்ச்சி ஊடகத்திற்கு கலத்திணிவை மாற்றுதல்.

v. வேர் அங்குரம் வளர்ச்சி நிகழும்.

## கட்டுரை வினாக்கள் - விடைகள்

1) கிளை ஒட்டு அல்லது அரும்பு ஒட்டு முறைமையை விபரியுங்கள்.

2) இயற்கை, செயற்கை நன்மை

3) நிலக்கீழ்த் தண்டுகள்

பல்லாண்டு வாழுமியல்பு

உறங்கு நிலை

வித்துக்கள் உருவாக்கம்


5 வருட நிறைவில்

அகரம்

அகரத்தின் ஐந்து வருட நிறைவை முன்னிட்டு எதிர்வரும் மார்ச் மாத இதழை சிறப்பிதழாக வெளியிடவுள்ளோம், இன்ஷா அல்லாஹ். அவ்விதழுக்கான விஷேட ஆக்கங்கள், கட்டுரைகள், கவிதைகள், கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அகரம்

77, தெமடகொட வீதி

கொழும்பு- 09




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிக் கதை

குதிரை ஒன்று குட்டி ஈன்றது. குதிரையைக் கட்டியிருந்த லாயத்துக்குச் சொந்தக்காரன் அந்தக் குட்டியை எடுத்துக் கொண்டு, இது தனது குட்டி என சொந்தம் கொண்டாடினான். குதிரைக் காரன் வழக்குத் தொடுத்தான். மத்தியஸ்தர் லாயத்துக்காரனை அழைத்து விசாரித்தார்.

"எனது லாயம் போட்ட குட்டி இது" என்றான் அவன்.

"லாயம் எப்படி குட்டி போடும்?" என்றார் மத்தியஸ்தர்.

"போடும். என்னிடம் சாட்சி இருக்கு!" என்றான் லாயக்காரன்.

"சிக்கலான விவகாரம். சாட்சி இல்லாம தீர்ப்பு சொல்ல முடியாது. சீக்கிரம் போய் அவங்க அவங்க சாட்சியை கூட்டிட்டு வாங்க" என்றார் மத்தியஸ்தர்.

மாலையில் பஞ்சாயத்து கூடியது. லாயத்துக்காரன் அவனுடைய செல்வாக்கினால் பல சாட்சிகளோடு வந்த அவர்கள் அடித்துச் சொன்னார்கள். "லாயம்தான் குட்டி போட்டது. நான் ரெண்டு கண்ணால பார்த்தேன்" என்றார்கள். குதிரைக்காரனுக்கு ஆதரவாக ஒன்றிரண்டு பேரே நியாயம் பேசினார்கள்.

அதிகம் பேர் சொன்னதை வைத்து மத்தியஸ்தம் செய்தவரும் லாயத்துக்காரனுக்கு ஆதரவாவே தீர்ப்பு சொன்னார்.

மரத்திலிருந்து பார்த்துக்கொண்டு இருந்த குருவி ஒன்று "மத்தியஸ்தரே! இப்படியா தீர்ப்பு சொல்வது?" எனக் கேட்டதாம்.

"பின் எப்படிச் சொல்வதாம்" என்று கோபமாய்க் கேட்டார் மத்தியஸ்தர்.

**"குதிரைக் குட்டிக்கு தாய்ப்பால் லாயம் வந்து கொடுக்குமா? குதிரை வந்து கொடுக்குமா? யோசியுங்கள் ஐயா, யோசியுங்கள். உண்மை என ஒன்று எப்போதும் இருக்கிறது" என பறந்து சென்றதாம் குருவி.**

நன்றி: இணையம்

## அகரத்தின் வினா-விடைப் போட்டி-01

**வெற்றி பெறுவோருக்கு பெறுமதியான நூல்கள், இறுவட்டுக்கள் வழங்கப்படும்.**

(உங்கள் விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி, ஜனவரி 25ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்)

அனுப்ப வேண்டிய முகவரி

அகரம்
வினா-விடை போட்டி-01
77, தெமடகொட வீதி,
கொழும்பு-09

### வினாக்கள்

1. அர்மேனியா எனும் ஒரு வகைக் கண்ணாடியைக் கண்ணாடியைக் கண்டுபிடித்தவர் யார்?
2. جَمَلٌ என்றால் என்ன?
3. இஸ்லாம் கூறும் வெற்றி எது?
4. சூரியனதும் சந்திரனதும் அசைவுகள் பற்றி ஆராய்ந்து நேரக்கணிப்பு பற்றி நூலை எழுதியவர் யார்?
5. வியப்பூட்டும் அல்குர்ஆன் என்ற நூலை எழுதியவர் யார்?
6. கண் விழித்திரை பற்றியும் அதன் தொழிற்பாடுகள் பற்றியும் விளக்கிக் கூறியவர் யார்?
7. பாராளுமன்றத்தைச் சுற்றி ஓடும் நதி எது?
8. சுவிஸ் நாட்டில் மினாராக்களுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து பின் இஸ்லாத்தை ஏற்றவர் யார்?
9. எக்ஸ்போ 2010 வர்த்தகக் கண்காட்சி எங்கே நடைபெற்றது?
10. பாகிஸ்தானில் வெள்ளப் பெருக்கு எத்தனையாம் ஆண்டு, எந்த மாதத்தில் ஏற்பட்டது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

**வினாப்பத்திரம் I**

**நேரம் 45 நிமிடங்கள்**

தயாரிப்பு: எம்.எம். முபாரக், எஸ்.ஐ.எல். முஸம்மில்

**பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

ரிங்... ரிங்...
தம்பி இந்த முகவரி யாருடையது?
இந்த முகவரி இந்த வீட்டு முகவரிதான்.
அப்படி என்றால் இது உங்களுக்குத்தான்.
இல்லை இது எங்களுக்கு இல்லை. இந்தப் பெயருடைய நபர் இங்கு இல்லை.
அப்படி என்றால் இவர் எங்குள்ளார்?
இந்த இலக்கம் தவறுதலாக எழுதப்பட்டிருக்கலாம்.
இலக்கம் ஐந்தை அல்லது இலக்கம் இருபத்து ஐந்தைப் பாருங்கள்.
சில வேளை இந்த நபர் அங்கிருக்கலாம்.
ஏனையவை சரியாகத்தான் எழுதப்பட்டிருக்கின்றன.
இதை யார், எங்கிருந்து அனுப்பியுள்ளார்கள்?
இது கொழும்பு இந்துக் கல்லூரியில் இருந்து தனபாலன் என்பவரால் அனுப்பப்பட்டுள்ளது.
ஆ... தனபாலன்! அவன் என்னுடைய நண்பன் தான். அப்படி என்றால் இது அவனது அண்ணனுக்குத்தான் வந்துள்ளது.
நீங்கள் சென்று இலக்கம் இருபத்தைந்தைப் பாருங்கள். இலக்கம் தான் மாறுபட்டுள்ளது.
நன்றி தம்பி. சென்று வருகிறேன்.

1. இந்த உரையாடலில் பங்குபற்றியோர்
i. அப்பாவும் மகனும் ii மாணவனும் தபாற்காரனும்
iii. தபால் அதிபரும் அண்ணனும்

2. இங்கு பயன்படுத்தப்பட்ட வாகனம்
i. சைக்கிள் ii. மோட்டார் சைக்கிள் iii. முச்சக்கர வண்டி

3. இக்கடிதம் கிடைக்கப்பெற வேண்டிய வீட்டு இலக்கம்
i. 5 ii. 15 iii. 25

4. தவறுதலாக எழுதப்பட்ட வீட்டு இலக்கம்
i. ஐந்து ii. பதினைந்து iii. குறிப்பிடப்படவில்லை

5. இக்கடிதம் யாரால் யாருக்கு அனுப்பப்பட்டது?
i. இந்துக் கல்லூரியில் இருந்து அண்ணனுக்கு
ii. தனபாலனினால் அவனது அண்ணனுக்கு
iii. தனபாலனினால் அவனது நண்பனுக்கு

**பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கான கருத்தை எழுதுக.**

6. Postman ...................
7. Letter..................

**சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

8. ........... வழிப்போக்கர்களுடன் சேர்ந்து பயணத்தை மேற்கொண்டாள்.
i. அவர்கள் ii. வைதேகி iii. மகேஸ்வரன்

9. .......... காட்டில் .......... ஆந்தை வாழ்ந்து வந்தது.
i. ஓர், ஒரு ii. ஒரு, ஒரு iii. ஒரு, ஓர்

10. ........ பூனையைக் கண்டதும் ........ கொண்டது.
i. கிளி, கிலி ii. கிளி, கிழி iii. கிலி, கிளி

*மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.*

11. சாடிகளை அமைக்கும்போது அதன் அடியில் ஒரு சிறு துவாரம் இடுவதன் நோக்கம் யாது?
i. சூரிய ஒளி உட்செல்ல ii. மேலதிக நீர் வெளியேற
iii. மேலதிக வளி வெளியேற

12. சாடிகளில் மிக நன்றாக வளரக்கூடிய தாவரங்களில் ஒன்று
i. மாதுளை ii. மா iii. அந்தூரியம்

13. பனிக்கட்டியை உருகாமல் வைக்கக்கூடிய இடம் எது?
i. மரத்தூளினுள் வைத்தல்
ii. கடதாசிப் பெட்டியில் வைத்தல்
iii. நீரினுள் வைத்தல்

14. நீரின் ஒரு இயல்பாகக் கருதக்கூடியது
i. எடுக்கும் பாத்திரத்தின் வடிவம் பெறும்
ii. மணம் உண்டு iii. நிறம் உண்டு

15. இயற்கையான ஒரு திடீர் விபத்து எது?
i. யுத்தம் ii. சூறாவளி iii. வாகன விபத்து

16. பின்வரும் உணவுகளில் விரைவாக நஞ்சாகாத உணவு எது?
i. தேன் ii. பால் iii. இறைச்சி

17. இலங்கையின் தேசிய இலச்சினையை எவற்றில் காணலாம்?
i. கடவுச் சீட்டு ii. தாள் காசு iii. பயிற்சிப் புத்தகம்

18. புராதன இலங்கையின் முதலாவது தலைநகரம் எது?
i. கொழும்பு ii. அநுராதபுரம் iii. கண்டி

19. நீர்த்தன்மை அதிகமுள்ள பழம் எது?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. வத்தகப்பழம்   ii. மாம்பழம்   iii. வாழைப்பழம்

20. நார்ப்பொருள் உள்ள உணவு எது?
i. அகத்தி   ii. வாழைப்பூ   iii. அவரை

**பின்வரும் உருக்களோடு தொடர்புடைய சொற்கள் ஒழுங்குப் பிரகாரம் அமைந்த தொகுதிக்குக் கீறிடுக.**


21. i. பாதுகாப்பு, போக்குவரத்து, நீந்துதல்
ii. பார்வை, பாதுகாப்பு, போக்குவரத்து
iii. போக்குவரத்து, கண்ணாடி, புத்தகம்





22. i. விற்றமின் C, கொடி, காற்று
ii. பழம், காய், தண்ணீர்   iii. பழம், செடி, காற்று

**பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் எழுதுக.**

23. காற்று வீசும் திசைக்கு எதிராகவே பாய்மரக்கப்பல் செல்லும். (   )
24. வயல்களில் வரம்புகள் கட்டப்படுவது ஆடு, மாடுகள் வயலுக்கு வராமல் இருப்பதற்கே. (   )
25. மாரி காலத்தில் மழை பொழியும். (   )
26. வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலத்தில் அதிகம் தொற்று நோய்களும் ஏற்படும். (   )
27. பொலித்தீன் பாவனையால் நன்மையைவிட தீங்குகளே அதிகம். (   )

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

28. 5 ரூபா நாணயங்கள் 7உம், 2 ரூபா நாணயங்கள் 12உம், 1 ரூபா நாணயங்கள் 17உம், 50 சத நாணயங்கள் 13களினதும் மொத்தப் பெறுமதி யாது?
i. ரூபா 72.50   ii. ரூபா 82.00   iii. ரூபா 82.50

29. நண்பகல் 12.05 மணியை டிஜிட்டல் (நியம) நேரத்தில் எழுதுக.


**அடுத்து வரும் எண்களை எழுதுக.**


30. 3070, 3080, 3090, .........., ............
31. 8030, 8060, 8090, ..........., ............

32. மழைக் காலத்தின்போது நிலத்திலிருந்து வெளியேறும் பிராணி
i. மரஅட்டை   ii. புற்றீசல்கள்   iii. மண்புழு

33. இதில் பிரகாசமாக எரியக்கூடிய மின்குமிழ் அமைப்பு எது?

i. 

ii. 

iii. 

**பின்வரும் சிங்கள சொற்களுக்கான கருத்தை எழுதுக.**

34. කළඹැල්ල..................... 35. මුහුණ.....................

**சரியான விடையின் இலக்கத்திற்கு வட்டமிடுக.**

36. பெற்றோர் எனப்படுவோர்
i. தாய்   ii. தாயும் தந்தையும்   iii. உற்றார் உறவினர்

37. உடலுக்கு பொருந்தாத சொல் ஒன்று
i. மெய்   ii. சரீரம்   iii. அவயம்

38. தன்மை பன்மை வினைச்சொல் ஒன்று
i. உண்டோம்   ii. நாம்   iii. உங்கள்

39. எதிர்கால ஒருமை வினைச்சொல்
i. உண்போம்   ii. வருவான்   iii. உங்கள்

40. குறுகிய ஓசை உடைய சொல்
i. அலை   ii. மாலை   iii. ஓலை

**வித்தியாசமான சொல்லைத் தெரிக.**

41. தூக்குக் குண்டு, சாந்தகப்பை, உளி, மணியாசு
42. உடும்பு, ஓணான், தவளை, பல்லி
43. யானை, மான், மரை, முயல்
44. புல்லாங்குழல், வீணை, நாதஸ்வரம், றபான்

**ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாத சொற்கள் இடம் பெறும் அடைப்பைத் தெரிக.**


45.


| | | |
|---|---|---|
| ஆசிரியர்<br>மாணவர்<br>பாடப் புத்தகம் | துறப்பணம்<br>சீவுளி<br>மணியாசு | தபாலகம்<br>முத்திரை<br>சேமிப்பு |

46.

| | | |
|---|---|---|
| நீர்மட்டம்<br>தூக்குகுண்டு<br>மூலை மட்டம் | மண்<br>குடம்<br>வனைச் சில்லு | வானொலி<br>தொலைபேசி<br>மின்சாரம் |

பிராணிகளின் கால்களை அடையாளம் கண்டு அவற்றின் பெயர்களைக் கீழ் உள்ள அடைப்பினுள் இருந்து தெரிந்து எழுதுக. (வாத்து, கொக்கு, மீன்கொத்தி, கழுகு, கோழி, மரங்கொத்தி, காகம்)



47.......... 48............ 49............ 50............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

எஸ்.ஐ.எல். முஸம்மில் ஆசிரியர்

**வினாப்பத்திரம் II**

**நேரம்**
**1 மணி 15 நிமிடம்**

**சரியான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

(நங்கூரம், பாக்குவெட்டி, கைராட்டினம், கலப்பை, அமைதியான சூழல், சோக்ரடீஸ், ஆட்டுக்கல்)

1. ................. நூல் நூற்றலுக்கு உதவுகின்றது.
2. கிராமப்புறங்களில் ................ நிலவுகின்றது.
3. கப்பல்கள் தரித்து நிற்க ............. உதவுகிறது.
4. ....... சமயலறையில் இருக்கும் ஒரு சாதனமாகும்.
5. ........................... ஒரு சிறந்த சிந்தனையாளர்.

**பின்வரும் சிங்கள சொற்களுக்கான கருத்தை எழுதுக.**

6. දූපසය .................   7. හුණු කූර .................

**பின்வரும் வசனங்களில் எழுவாய் அடைமொழிகளைக் கண்டறிந்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

8. அழகான மேடையில் உயரமான மனிதன் ஏறினான் ..................................................
9. புள்ளிமான் துள்ளி ஓடியது ...........................
10. நீண்ட வானில் கார் மேகங்கள் சூழ்ந்து காணப்பட்டன.

**பின்வரும் ஆங்கில சொற்களுக்கான கருத்தை எழுதுக.**

11. DATE OF BIRTH ......................................
12. DAYS ..................................................

**பின்வரும் வாக்கியங்களில் கருத்துப் பிழையற்ற வாக்கியத்தின் குறியீட்டை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

13. அ. உழவனும் உழவியும் வயலில் வேலை செய்தனர்.
 ஆ. குதிரை கனைத்துக் கொண்டு ஓடியது.
 இ. ஆந்தை பகல் வேளைகளில் சுதந்திரமாக சுற்றித் திரியும்.

14. அ. சுவாசக் கோளாறு உள்ளவர்கள் மூக்குக் கண்ணாடியை அணிவர்.
 ஆ. புகையிரத வண்டியில் பயணம் செய்ய விரும்புவோர் விரும்பிய இடங்களில் ஏறிக்கொள்ளலாம்.
 இ. உஷ்ணப் பிதேசங்களுக்கு பருத்தி ஆடை உகந்தது.

**மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

15. தூங்கும் போது தலை கீழாகத் தொங்கும் பறவை எது?
 i. தேவாங்கு   ii. ஆந்தை   iii. மயில்

16. உணவுகளை பற்களால் கொறித்து உண்ணும் பிராணி எது?
 i. புறா   ii. அணில்   iii. கிளி

17. நுளம்பின் வாழ்க்கை வட்டம் நடைபெறும் ஒழுங்கு முறை யாது?
 i. குடலி, முட்டை, கூட்டுப்புழு, நிறையுடலி
 ii. முட்டை, கூட்டுப்புழு, குடலி, நிறையுடலி
 iii. முட்டை, குடலி, கூட்டுப்புழு, நிறையுடலி

18. நீரின் மேலும் வாழும் பிராணி எது?
 i. மீன்   ii. அன்னம்   iii. பாம்பு

19. வெப்பமான வேளையில் எருமை காட்டும் துலங்கல்களில் ஒன்று.
 i. அங்கும் இங்கும் நடமாடும்
 ii. நீரில் படுத்திருக்கும்
 iii. நிழலில் ஒதுங்கி நிற்கும்

20. குளிரான வேளைகளில் பூனை காட்டும் துலங்கல்ளில் ஒன்று.
 i. வீட்டுக்குள் ஓடி ஒதுங்கும்
 ii. அடுப்பங்கரையில் படுத்து உறங்கும்
 iii. வீட்டுக்குள் நிற்கும்

21. பூச்சிகள் மணம், சுவை என்பவற்றை அறிய உதவுவது எது?
 i. மூக்கு  ii. உணர்கொம்பு  iii. நாக்கும் மூக்கும்

22. அடைக்காக்கப்பட்ட கோழி முட்டைகள் எத்தனை நாட்களில் குஞ்சு பொறிக்கும்?
 i. 27 நாட்களில்   ii. 21 நாட்களில்
 iii. 23 நாட்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**23.** எமது நாட்டிற்கே உரித்தான பிராணி எது?

i. கானாங் கோழி ii. கீரிப்பிள்ளை

iii. மரத்தவளை

**24.** மண்புற்றைக் கட்டிவாழும் பிராணி எது?

i. பாம்பு ii. உடும்பு iii. கறையான்

**வாக்கியங்களை ஒழுங்கமைக்குக.**

**25.** அழகு- தெரியும்- முகத்தில்- அகத்தின்

**26.** தங்க- பெண்கள்- அணிவதில்- காட்டுவர்- நகை- ஆர்வம்

**உருக்களின் பெறுமானங்களை இனங்கண்டு கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.**

△ + △ = 40

⊗ − 5 = △

⊠ + = □

**27.** □ இன் பெறுமானம் யாது?


i. 25 ii. 20 iii. 45

**28.** ⊗ இன் பெறுமானம் யாது?

i. 25 ii. 15 iii. 20


**எண்கோலத்தை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.**

**29.**




i. 60 ii. 30 iii. 15

**30.**




i. 30 ii. 24 iii. 28

**31.** பாடசாலை ஒன்றில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 320 பேர். இவர்களுள் சித்தியடைந்தவர்கள் $\frac{1}{8}$ பகுதியினர். சித்தியடையாதவர்கள் எத்தனை பேர்?

i. 40 பேர் ii. 240 பேர் iii. 280 பேர்


**32.** சர்பான் மாதம் ஒன்றுக்கு ரூபா 6000.00 சம்பளமாகப் பெறுகிறான். இதில் $\frac{1}{2}$ பங்கை அம்மாவிற்கும் $\frac{1}{4}$ பங்கை சேமிப்பும் செய்கிறான். அவனிடம் இருக்கும் மிகுதிப் பணம் எவ்வளவு?

i. ரூபா 1500.00 ii. ரூபா 3000.00

iii. ரூபா 4500.00


**கீழ்வரும் பொருட்களை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கலாம். இக் கூட்டங்களை சரியாக இனங்காட்டும் விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கீறிடுக.**

**33.**




i. Bயும் Eயும் ii. Dயும் Fயும் iii. Aயும் Cயும்

**34.**




i. Aயும் Dயும் ii. Bயும் Fயும் iii. Dயும் Eயும்

**35. இலங்கையின் தேசிய மரமான நாகமரத்தின் பூவைக் காட்டும் சரியான படத்தின் கீழ் கீறிடுக.**




**36.** பின்வரும் கட்டங்களை ஒழுங்குபடுத்த ஒரு பாடல் அமையப் பெறும். அதன் ஒழுங்கு படுத்தப்பட்ட தொகுதிக்கு கோடிடுக.

| | | | |
|---|---|---|---|
| வண்ணப் | வண்ணப் | பூவே | பூவே |
| வண்ணப் | வானம் | பூவே | பார்க்கும் |
| எட்டிப் | வான் | பார்க்க | நிலவும் |
| வண்ணப் | வாசம் | வீசும் | வீசும் |

i. அ, இ, ஆ, ஈ ii. ஆ, இ, அ, ஈ iii. ஆ, ஈ, அ, இ

சிம்பு விவேகானந்தா கல்லூரியில் ஐந்தாம் தரம் கற்கும் மாணவன். ஓவியம் வரைவதில் அவனுக்கு நிகர் அவனேதான். ஓவியப் போட்டி ஒன்றில் வெற்றி பெற்ற அவனுக்கு கொழும்பில் பெரிய விழா ஒன்றில் பதக்கம் அணிவிக்கப்பட இருக்கின்றது. தற்போது அவனது பெயர் வாசிக்கப்படுகின்றது. சிம்புவாக உங்களையே நீங்கள் நினைத்துக் கொண்டு ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம் தகவல் திரட்டு-2011

அன்பான ஆசிரியர்களே, மாணாக்கரே,
அகரத்தின் எதிர்கால திட்டமிடல், விருத்தி என்பவற்றைக் கருதி இந்தத் தகவல் திரட்டு இணைக்கப்பட்டுள்ளது.
எனவே, இப்படிவத்தை நிரப்பி எமது வளர்ச்சிக்கு துணை செய்யுமாறு வேண்டுகிறோம். (ஆசிரியர் பீடம்)

**உங்கள் விபரம்**

பெயர் :....................................................................................................................

பால் : ஆண்: ☐ பெண்: ☐

முகவரி : ....................................................................................................................

கிராமம்/ நகரம் : ..........................................................................................................

கல்வி கற்கும்/ கற்பிக்கும் பாடசாலை : .............................................................................

தரம் :. ........................................................................................................................

**அகரம் தொடர்பாக...**

**1. அகரத்தை உங்களுக்கு அறிமுகப்படுத்தியவர்**

ஆசிரியர் ☐ வகுப்புத் தோழர் ☐ பெற்றோர் ☐ வேறு : .................................

**2. அகரம் உங்களுக்குக் கிடைப்பது**

தபாலில் ☐ கடைகளில் ☐ விற்பனை முகவர் மூலம் ☐ வேறு : .................................

**3. எவ்வளவு காலமாக அகரம் வாசகராக உள்ளீர்கள்?**..........................................................

**4. ஒவ்வொரு மாதமும் தவறாது அகரம் வாசிக்கின்றீர்களா?**

ஆம் ☐ இல்லை ☐

காரணம் : ....................................................................................................................

**5. உங்கள் நண்பர்களுக்கு, வகுப்புத் தோழர்களுக்கு சகோதர, சகோதரிகளுக்கு அகரத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறீர்களா?**

ஆம் ☐ இல்லை ☐ ஆம் எனின், எத்தனை பேருக்கு.....................................

**6. நீங்கள் பெறும் அகரம் இதழை எத்தனை பேர் வாசிக்கிறீர்கள்?**.............................................

**7. மாதத்தின் எத்தனையாம் திகதி உங்களுக்கு அகரம் கிடைக்கப் பெறுகிறது?** ..............................

**8. எத்தனை நாட்களுள் அகரம் வாசித்து முடிப்பீர்கள்?** ............................................................

**9. வேறு ஏதாவது கல்விச் சஞ்சிகைகள் வாசிக்கின்றீர்களா?**

ஆம் ☐ இல்லை ☐

பெயரைக் குறிப்பிடவும்: ....................................................................................................

**10. வேறு ஏதாவது இஸ்லாமிய சஞ்சிகைகள் வாசிக்கின்றீர்களா?**

ஆம் ☐ இல்லை ☐

பெயரைக் குறிப்பிடவும் ....................................................................................................

**11. தரம் 5 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கான இதழாக அகரம் வெளிவருவது தொடர்பாக உங்களது கருத்து என்ன?**

.................................................................................................................................

(இவ்விடத்தால் வேறாக்கவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12. அகரத்தில் உங்களுக்குப் பிடித்த ஆக்கங்கள். (தரப்படுத்துக)**

| | மிக நன்று | நன்று | சாதாரணம் | தரம்குறைவு |
|---|---|---|---|---|
| வாழும் அற்புதம் அல்குர்ஆன் | | | | |
| ஹதீஸ் பூங்காவிலிருந்து | | | | |
| அன்றாட வாழ்வில் அரபு மொழி | | | | |
| English | | | | |
| வரலாற்று முன்னோடிகள் | | | | |
| கார்ட்டூன் சித்திரக் கதை | | | | |
| கவிதை | | | | |
| சிறுகதை | | | | |

**13. அதிகம் இடம்பெற வேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கும் ஆக்கங்கள். (1, 2, 3...எனத் தரப்படுத்துக)**

பொதுவான ஆக்கங்கள் ☐
இஸ்லாமிய ஆக்கங்கள் ☐
பொது அறிவுத் தகவல்கள் ☐
விஞ்ஞான தகவல் தொழிநுட்பத்துடன் தொடர்பானவை ☐
பாடசாலைக் கல்வியுடன் தொடர்பான ஆக்கங்கள் ☐
வேறு : ............................................................................................................................

**14. எவ்வகையான போட்டி நிகழ்ச்சிகளை எதிர்பார்க்கின்றீர்கள்?**

குறுக்கெழுத்துப் போட்டி ☐ வினாவிடைப் போட்டி ☐ வேறு: ............................................

**15. அகரத்தில் இடம்பெறும் எத்தகைய ஆக்கங்கள் பொருத்தமற்றது எனக் கருதுகின்றீர்கள்?**
............................................................................................................................

**காரணம் என்ன?**............................................................................................................

**16. அன்றாட வாழ்வில் அரபு மொழி தொடர்பாக உங்கள் கருத்து** ..........................................................

**17. பாடசாலைக் கல்வியுடன் தொடர்பான எவ்வகையான ஆக்கங்களை எதிர்பார்க்கிறீர்கள்?**
............................................................................................................................

**18. அகரத்தில் சிங்கள மொழி இணைக்கப்படுவது தொடர்பாக உங்கள் கருத்து**

அவசியம் ☐ அவசியமில்லை ☐

**19. வளவாளர்களால் கல்வி வழிகாட்டல் தொடர்பான ஆக்கங்கள் வெளிவருவது தொடர்பாக உங்கள் கருத்து**

அவசியம் ☐ அவசியமில்லை ☐

**20. அகரத்திற்கு ஆக்கங்கள் அனுப்பியுள்ளீர்களா?**............................................................

**21. அட்டைப்படம் தொடர்பாக உங்களது கருத்து** ........................................................

மிக நன்றாக உள்ளது ☐ நன்று ☐ சாதாரணம் ☐ தரம் குறைவு ☐

**22. அகரத்தில் பயன்படுத்தப்படும் தாள், எழுத்து, அதன் பக்க வடிவமைப்பு தொடர்பாக உங்கள் கருத்து**

தரமாக உள்ளது ☐ சாதாரணம் ☐ தரம் குறைவு ☐ இன்னும்அதிகரிக்கப்பட வேண்டும் ☐

**23. அகரத்தின பக்கங்கள் விலை தொடர்பாக**

பக்கங்கள் மட்டும் அதிகரிக்கப்பட வேண்டும் ☐
பக்கங்களுடன் விலையும் அதிகரிக்கப்படலாம் ☐
மாற்றங்கள் தேவை இல்லை ☐

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

குறிப்பு: மேலதிகமாக தகவல்கள் இணைக்க விரும்பினால் தனியான தாளில் எழுதி இணைக்கவும்.


(இவ்விடத்தால் வேறாக்கவும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள்


## ஈத் பெருநாள்



எம்.என். பாத்திமா அஸ்ரா, தரம்-7
பதுரியா மத்திய கல்லூரி
மாவனல்லை



எம்.என். நிஸ்மா
தரம்-5
பு/ செய்னப் முஸ்லிம் வித்தியாலயம்



எம்.என்.எப். நஸ்ரின், தரம்-9
க/ அல்-சபா ம.வி.
பொல்கொல்ல

## பாராட்டைப் பெறும் வண்ணங்கள்



எம்.ஆர்.எப். பர்ஸானா
தரம்-6
குளி/ பண்டார கொஸ்வத்தை மு.ம.வி.



ஏ.எம். முன்தஹா
திஹாரிய



எம்.எம்.எப். இல்மா, தரம்-6
இ/ அல்மக்கியா மு.ம.வி
இரத்தினபுரி



எம்.எஸ்.எப். சுமையா, தரம்-7
கா/ ஸாஹிறா தேசிய பாடசாலை
கிந்தோட்டை



எம்.ஜே.எப். முபஷ்ஷிரா, தரம்-7
பு/பாத்திமா பாலிகா ம.வி.
புத்தளம்



பாத்திமா புவாட், தரம்-6
க/ மதீனா தேசிய பாடசாலை
மடவளை



இஹ்திஸாம், தரம்-6
அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை
பேருவளை



அஷ்பாக் இஸ்ஸத், தரம்-6
அல்-ஹுமைரா தேசிய பாடசாலை
பேருவளை




எம்.ஆர்.எம். ஷாமில்
குளி/ பண்டார கொஸ்வத்தை மு.ம.வி



எம்.என்.எப். அஸ்ரா, தரம்-7
அலிகார் ம.வி.
கல் எளிய



எம்.ரீ.எப். நளீரா
தரம்-8
கனமூலை முஸ்லிம் ம.வி.



எம்.ரீ.எப். நப்றா
தரம்-6
கனமூலை மு.ம.வி.

அடுத்த சித்திரத்திற்கான தலைப்பு ☞ முஹர்ரம் வாழ்த்து மடல்

இறுதித்திகதி
2011.01.20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WinSYS NETWORKS®

*The network security training provider of the nation*

**Tel: 011-2589567/8,011-4340666,0777 259927**

## Hi-Tech Computer Training & Consulting Center

No: 14, Schofield Place, Kollupitiya, Colombo-03, Sri Lanka.


www.winsysnetworks.net info@winsysnetworks.net

## Special Diploma In Networking

Introduction to Networking: / Networking Basics
Network Topologies / Network Technologies
Network Hardware's
Installing and Configuring
Windows 2003 Server /XP
CD Rom Installation
Unattended Installation
Disk Management (Mirror, Raid 5)
TCP/IP (Transmission Control Protocol /Internet Protocol)
DHCP (Dynamic Host Configuration Protocol)
DNS (Domain Naming Server)
IIS (Internet Information Service)
Routing & Remote Access / Network Environments
Active Directory Services
Domain Controller
Domain Security
ISA (Internet Security & Acceleration)
Proxy Server
E-mail Server (Exchange Server)
Network Cabling & Management
Linux - Introduction to Linux
- Linux Installation / User Creation
Modern Computer Technology /VMWARE virtualization
E-mail, Internet / Infrared / Blue tooth / Blu-ray

Java MySQL CorelDRAW Adobe Office CISCO Microsoft Linux Sun ORACLE

### Visit Over Labs And Decide Your Future



# REFER 5 STUDENTS FOR ANY TRAINING
# GET YOUR TRAINING TOTALLY FREE

# 5 DAYS BOOT CAMP
*Accommodation*
*(Colombo / Kandy / Puttalam)*

- # Hardware & Networking
- # Diploma in Office Applications (2010)
- # Diploma in Desktop Publishing
- # Advanced Diploma in Computer Studies
- # Computer Accounting
- # Web Designing
- # Internet & E-Mail

## Twin-WIN Kids Courses

*Course contents*

MS-Paint (Mouse, Key board)
Games & Soft ware
MS-Word /MS-Excel (2010)
MS-Power Point (2010)
Art Club Software

**Branches**
E-win NETWORKS - Kandy. 081-2203785/6
Twin-WIN ICT Professional - Puttalam. 032-2267477

*Tertiary and Vocational Education Commission - Sri Lanka :- Reg No: 001-0402*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org